Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JULY 28, 2022

வியாழக்கிழமை ஜூலை 28, 2022 | ஒளி: 08 கதிர் 061 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## உங்களுக்கு தெரியுமா?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்திற்கு தீவைத்து தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்களை கைது செய்வதற்கு பொதுமக்களின் உதவியை குற்றப்புலனாய்வு பிரிவினர் கோரியுள்ளனர்.

பொதுமக்கள் தங்களுடைய தகவல்களை 0718-594950, 0718-594929, 0112-422176 என்ற இலக்கங்களின் ஊடாக வழங்க முடியும்.

### அவசரகால சட்டம் நிறைவேறியது

# 120 ஆதரவு: 63 எதிர்ப்பு

■ பா. நிரோஸ்

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் புதிய பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோர் தலைமையிலான அரசாங்கத்தின் முதலாவது பிரேரணை, பாராளுமன்றத்தில் நேற்று (27) நிறைவேற்றப்பட்டது. பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதில் ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட அவசரகால நிலைமைப் பிரகடனம் தொடர்பான தீர்மானம் மீது பாராளுமன்றத்தில் முழுநாள் விவாதம் நடத்தப்பட்டது. அதன்பின்னர் நேற்று (27) மாலை வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல, பிரேரணை வாக்கெடுப்பு விடுமாறு கோரியிருந்தார். ஆதரவாக 120 வாக்குகள் அளிக்கப்பட்டதுடன், எதிராக 63 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

தொடர்ச்சி P2



## பயனடைந்தவரே பந்தாடுகின்றார்

■ பா. நிரோஸ்

நாட்டில் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் போராட்டத்தின் மூலம் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே அதிகளவில் பயனடைந்துள்ளார். ஆனால் இப்போது அவர் அந்தப் போராட்டத்துக்கு எதிராக செயற்படுகின்றார் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## 'கிழமை'யால் பறி போன உயிர்

■ செஹ்ன் செனவிரத்ன

கண்டி- அக்குறணை பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் படுகாயமடைந்த நபர் ஒருவரை, வைத்தியசாலை பணியாளர்கள் அனுமதிக்க மறுத்தமை காரணமாக குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் அக்குறணை- நிரல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதான மொஹமட் ரில்வான் என தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2



பதவி கைமாறியதால்

# கோட்டா உள்ளே: ரணில் வெளியே

### கோட்டாவுக்கு உயர்நீதிமன்றம் மீண்டும் நோட்டீஸ்

நாட்டைப் பொருளாதார நெருக்கடிக்கு இட்டுச் சென்ற அனைவருக்கும் எதிராக கடுமையான விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மீறல் மனுக்கள் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளில் இருந்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விடுவிக்குமாறு உயர் நீதிமன்றம், நேற்று (27) உத்தரவிட்டது. மேலும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்ததையடுத்து, அவருக்கு ஜனாதிபதி சிறப்புரிமை பொருந்தாது என்பதால், இந்த மனுக்களில் பிரதிவாதியாக அவரைப் பெயரிடவும் அவருக்கு நோட்டீஸ் பிறப்பிக்கவும் உயர் நீதிமன்றம் கட்டளையிட்டது.

தொடர்ச்சி P2



### விமான நிலையத்தில் கைதான

## தனிஸ் அலி மீது விரைவில் வழக்கு

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் அத்துமீறி நுழைந்து அச்சுறுத்தல் விடுத்தார் என்று குற்றம் சுமத்தப்பட்ட தனிஸ் அலி என்பவர், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புறப்படுவதற்கு தயாராக இருந்த விமானத்தில் இருந்து, நேற்று முன்தினம் (26) மாலை கைது செய்யப்பட்டார்.

டுபாய் நோக்கி புறப்பட இருந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் வைத்து குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரால் அவர் கைது செய்யப்பட்ட போது, பயணிகள் அதிர்ச்சியடைந்ததுடன், அது குறித்த வீடியோவை வெளியிட்டு தங்களது அதிருப்தியையும் வெளியிட்டிருந்தனர்.

தொடர்ச்சி P2

### அரசாங்கத்துடன் இணைந்து

## பொது வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வாருங்கள்



■ பா.நிரோஸ்

அகிம்சை வழியிலான ஜனநாயகப் போராட்டங்களுக்கு செவிசாய்க்க அரசாங்கம் தயாராக இருப்பதாக சபையில் தெரிவித்த பிரதமர் தினேஸ் குணவர்தன, பயங்கரவாதச் செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், அரசாங்கத்துடன் இணைந்து பொதுவான வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தார்.

தொடர்ச்சி P2





## இரு ராஜபக்ஷர்களின் பயணத் தடை நீட்டிப்பு

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ உட்பட அறுவருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டிருந்த வெளிநாட்டுப் பயணத்தடையை ஒகஸ்ட் 2ஆம் திகதி வரை நீட்டிக்குமாறு, உயர்நீதிமன்றம், நேற்று (27) உத்தரவிட்டது.

நாட்டைப் பொருளாதார நெருக்கடிக்கு இட்டுச் சென்ற அனைவருக்கும் எதிராக கடுமையான விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிடக் கோரி அடிப்படை உரிமைகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

தொடர்ச்சி P2



## ஜனாதிபதி -அமெரிக்க தூதுவர் சந்திப்பு

இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி நிலைமையில் எவ்வாறு இணைந்து பயணிப்பது என்பது குறித்தும், இலங்கையில் மனித உரிமைகளை பலப்படுத்தி நல்லாட்சியின் மூலமாக மக்களின் அபிலாஷைகளை வெற்றிகொள்ளும் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் கலந்துரையாடியுள்ளார்.

தொடர்ச்சி P2

## மதுபானத்தின் தரத்தை அறிய செயலி




வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் மதுபானங்களின் நம்பகத்தன்மையைக் கண்டறியும் வகையில் செயலி ஒன்றை அறிமுகப்படுத்த இலங்கை கலால் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2

## கம்பஹா நீதிமன்ற வளாகத்தில் சூடு

### பஸ் பொட்டா உட்பட நால்வர் படுகாயம்




கம்பஹா நீதிமன்ற வளாகத்தில் நேற்று (27) மதியம் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் போதைப் பொருள் குற்றவாளியான பஸ் பொட்டா உட்பட நால்வர் படுகாயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

### யாழ். பல்கலைக்கழகத்தில் பகடிவதை;

## 18 மாணவர்களுக்கு தற்காலிக வகுப்புத்தடை

### நிரூபிக்கப்பட்டால் இரு வருடங்களுக்கு குறையாத வகுப்புத்தடை

■ எம்.றொசாந்த்

யாழ்.பல்கலைக்கழகத்தில் பகடிவதையில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள மாணவர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் , பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கையில் பிரகாரம், 2 வருட காலத்துக்கு குறையாத வகுப்புத்தடை விதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.பல்கலைக்கழத்தின் புதுமுக மாணவர்களை ஒன்றுகூடல் எனும் பெயரில் யாழ்ப்பாணம், தெல்லிப்பளை பகுதிக்கு அழைத்து, பகடிவதைக்கு உட்படுத்தப்படுவதாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ்க்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது.

இம்முறைப்பாட்டின் பிரகாரம், அது தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழு இணைப்பாளரால் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

### போராட்டத்தின் இறுதி இலக்கை அடைவதற்கு

## ஒகஸ்ட் 09 ஆம் திகதி கொழும்புக்கு வாருங்கள்



■ பா.நிரோஸ்

போராட்டத்தின் இறுதி இலக்கை அடைந்துக்கொள்வதற்காக அடுத்த மாதம் 09ஆம் திகதி நாட்டு மக்கள் அனைவரும் கொழும்புக்கு வரவேண்டுமென தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,

தொடர்ச்சி P2

## போராட்டத்தில் "குடு" காரர்கள்



■ பா.நிரோஸ்

அரசாங்கத்துக்கு எதிராக கடந்த காலங்களில் அமைதியான முறையில் போராட்டங்களை நடத்தியவர்கள் தற்போது புதிய ஜனாதிபதி மற்றும் பிரதமருக்குக இடமளித்து போராட்டங்களில் இருந்து ஒதுங்கிக்கொண்டுள்ளனர் எனத் தெரிவித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, காலிமுகத்திடலில் போதைப்பொருள் காரர்களே இப்போது இருக்கின்றனர் என்பதால், அந்தப் பகுதி போராட்ட இடமாக தொடர்ந்தும் இருப்பதை அனுமதிக்க முடியாது என்றார்.

தொடர்ச்சி P2

## சீனாவிடம் 4 பில்லியன் டொலர் கேட்கிறது இலங்கை



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரைவில் சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாகவும், சீனாவுடன் நேரடி பேச்சுக்களை மேற்கொண்டு இலங்கைக்கான நிவாரண உதவிகளையும், கடன் உதவிகளையும் பெற்றுக்கொள்ள தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘கிழமை’யால்...

அக்குறணை பிரதேசத்தில் ஹோட்டலொன்றை நடத்திச் செல்லும் குறித்த நபர், அக்குறணை நகரில் எரிபொருள் வரிசையில் இருப்பவர்களுக்கு தேநீர் தயாரிப்பதற்காக, இஞ்சி கொள்வனவு செய்ய அருகிலிருக்கும் கடைக்குச் சென்ற போது விபத்துக்குள்ளாகியுள்ளார்.

இதனையடுத்து அவரது மகன் காரொன்றின் மூலம் தந்தையை கண்டி தேசிய வைத்தியசாலைக்கு அழைத்து வந்த போது, அங்கிருந்த பணியாளர் ஒருவர், வியாழன் மற்றும் ஞாயிற்று கிழமைகளில் நோயாளர்களை பொறுப்பேற்பதில்லை என தெரிவித்து, விபத்துக்குள்ளானவரை பொறுப்பற்க மறுத்துள்ளார்.

இதன்போது விபத்துக்குள்ளான நபருக்கு முதலுதவி அளிப்பதற்கு கூட வைத்தியசாலை பணியாளர்கள் முன்வராத நிலையில், பேராதனை வைத்தியசாலைக்கு நோயாளியை கொண்டு செல்வதற்கும் அம்பியூலன்ஸ் வண்டியையும் தர மறுத்துள்ளனர். இதனையடுத்து அவரது மகன் 1990 என்ற அவசர அம்பியூலன்ஸ் சேவைக்கு அழைத்த போது, ஒரு வைத்தியசாலையிலிருந்து மற்றுமொரு வைத்தியசாலைக்கு நோயாளியை கொண்டு செல்லும் பணியை தாம் செய்வதில்லை என பதிலளித்துள்ளனர்.

இதனையடுத்து கண்டி வைத்தியசாலையின் அம்பியூலன்ஸ் வண்டி சாரதி ஒருவரின் உதவியுடன் 6,500 ரூபாய் செலுத்தி தனியார் அம்பியூலன்ஸ் வண்டியொன்றில் பேராதனை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது, அவர் அங்கு உயிரிழந்துள்ளார்.

கண்டி தேசிய வைத்தியசாலையில் நோயாளியைப் பொறுப்பேற்காமை தொடர்பில் சுகாதார அமைச்சுக்கு பாதிக்கப்பட்ட தரப்பினர் முறையிட்டுள்ளதாகவும் இது தொடர்பில் கண்டி தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பேராதனை போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி அமல் ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

# 120 ஆதரவு: 63 எதிர்ப்பு

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் 2022.07.17ஆம் திகதியன்று செய்யப்பட்ட பிரகடனத்தின் மூலம் மேற்படி கட்டளைச்சட்டத்தின் IIஆம் பகுதியின் கீழ் இலங்கை முழுவதும் 2022.07.18ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருவதாக அப்போதைய பதில் ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்துக்கு அமைய இந்தப் பிரகடனத்துக்கு 14 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் அனுமதி கிடைக்கப்பெற்றால் ஒரு மாத காலத்துக்கு நடைமுறைப்படுத்தலாம். 14 நாட்களுக்குள் இந்தப் பிரகடனத்துக்கு பாராளுமன்றத்தின் அனுமதி கிடைக்கப் பெறாவிட்டால் அது இரத்தாகும். அத்துடன், ஒவ்வொரு 30 நாட்களுக்கும் ஒரு முறை அவசரகால நிலைமை பாராளுமன்றத்தின் அனுமதியுடன் நீடிக்கப்பட முடியும்.

# கோட்டா உள்ளே: ரணில் வெளியே

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் மனு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன்போது, மனுவில் பிரதிவாதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அவருக்கு எதிராக நிவாரணம் கோருவதற்கு மனுதாரர்கள் எதிர்பார்க்கவில்லை என மனுதாரர்கள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தக ஜயசுந்தர, மன்றுக்கு அறிவித்தார்.

அதற்கமைய நீதிமன்ற நடவடிக்கைகளில் இருந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விடுவிக்குமாறு அவர் மன்றில் கோரிக்கை விடுத்தார்.

உண்மைகளை கருத்திற்கொண்ட ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நீதிமன்ற நடவடிக்கைகளை நிறுத்த தீர்மானித்ததுடன், இந்த அடிப்படை உரிமை மனுக்கள் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளில் இருந்து அவரை விடுவிக்குமாறு உத்தரவிட்டது.

மேலும், ஜனாதிபதி பதவியில் இருந்து இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதி சிறப்புரைமை பொருந்தாது என்பதால் அவரை, இந்த மனுக்களில் பிரதிவாதியாக பெயரிட உயர் நீதிமன்றம் தீர்மானித்தது.

அதன்படி, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி மன்றில் முன்னிலையாவதற்கான நோட்டீஸை மீண்டும் அனுப்புமாறு நீதிமன்ற பதிவாளருக்கு உத்தரவிடப்பட்டது.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் சந்திர ஜயரத்ன, பிரபல இலங்கை நீச்சல் வீரரும் பயிற்சியாளருமான ஜூலியன் பொலிங் மற்றும் ட்ரான்ஸ்பெரன்ஸி இன்டர்நஷனல் மற்றும் ஜெஹான் கனகரட்ன உட்பட மூன்று பல்கலைக்கழக கல்வியாளர்களால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய சார்பில் சட்டமா அதிபர், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, தற்போதைய ஜனாதிபதியும் முன்னாள் நிதியமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க, இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான டபிள்யூ.டி. லக்ஷ்மன் மற்றும் அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல, மத்திய வங்கியின் நாணயச் சபை ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தனர்.

# பயனடைந்தவரே...

பாராளுமன்றத்தில் நேற்று (27) நடைபெற்ற அவசரகால ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

கடந்த மூன்று மாதங்களில் மூன்றாவது தடவையாக அவசரகால சட்டம் கொண்டுவரப்பட்டது. மே மாதத்தில் அப்போதிருந்த ஜனாதிபதி கோட்டாபய அதனை கொண்டு வந்த போது அது நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டதை தொடர்ந்து நீக்கிக்கொள்ளப்பட்டது. அது தொடர்ந்தும் கொண்டுவரப்பட்டது. எனினும், அதனுடைய காலம் முடிவடைந்தது. இதனை தொடர்ந்து மீண்டும் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னர் அவசரகாலச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

ஏன் இந்த அவசரகால சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது என்று பார்க்கும் போது, நாங்கள் ஏப்ரல் மாதம் முதல் ஜூலை மாதம் வரையில் நெருக்கடிகளை சந்தித்து வருகின்றோம். அப்போது பல தடவைகளில் அவசரகால சட்டத்தை கொண்டு வந்த போதும், அவை தோல்வியடைந்துள்ளன.

இந்நிலையில் புதிய ஜனாதிபதி வந்த பின்னர் அவசரகால சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. என்ன நோக்கத்திற்காக இது கொண்டு வரப்பட்டது. போராட்டம் நடக்காவிட்டால் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியா கியிருக்கமாட்டார். பதவியேற்ற பின்னர் போராட்டத்தை தவறென கூறுகின்றார் என்றார்.

# தனிஸ் அலி...

தான், நாட்டை விட்டுத் தப்பிச் செல்லவில்லை என்றும், சர்வதேச சமூகத்துக்கு போராட்ட எதிர்ப்புச் செய்தியை எடுத்துச் செல்வதற்காகவும் ஐ.நா.விடம் வழக்கை முன்வைப்பதற்காகவும் வெளிநாட்டுக்கு பயணிப்பதாக தனிஸ் அலி குறிப்பிட்டார். தலைமுடியை வெட்டி மற்றும் தாடியை சவரம் செய்திருந்தமை குறித்து வினவியபோது, தனது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களின் கோரிக்கைக்கு அமையவே அவ்வாறு செய்ததாக தெரிவித்தார். ஜூலை 13 ஆம் திகதி இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் அத்துமீறி நுழைந்தமை, நேரடி ஒளிபரப்புக்கு அச்சுறுத்தல் விடுத்தமை மற்றும் கூட்டுத்தாபனதின் ஒளிபரப்பை சிறிது நேரம் இடைநிறுத்த வற்புறுத்தியமைக்காக அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மீது குறித்த மூன்று குற்றச்சாட்டுகள் உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வரும் தனிஸ் அலியை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஆயத்தங்கள் இடம் பெற்று வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஜனாதிபதி -அமெரிக்க தூதுவர் சந்திப்பு

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (27) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியின் போது இலங்கைக்கு எவ்வாறான ஒத்துழைப்புக்களை வழங்குவது, மற்றும் அரசியல், பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு இணைந்து பயணிப்பது குறித்து இருவருக்கு இடையிலும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கை மிக நெருக்கடியான நிலைக்கு முகங்கொடுத்துள்ள வேலையில் ரணில் பதவி ஏற்றுள்ளார். இலங்கைக்கு இவ்வாறானதொரு நிலை எவ்வாறு ஏற்பட்டது மற்றும் இந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான வேலைத்திட்டங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளதாக தெரிவித்துள்ள அவர், 70 ஆண்டு காலமாக இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவு பேணப்படுகின்றது. அவ்வாறான நிலையில் இலங்கையில் நல்லாட்சியை உருவாக்கும், மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து, மக்களின் அபிலாஷைகளுக்கு செவிசாய்க்கும் நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பொது வேலைத்திட்டத்தை...

பாராளுமன்றத்தின் நேற்றைய (27) அமர்வில் உரையாற்றிய அவர், நாம் பல்வேறு அரசியல் கொள்கைகளைக் கொண்டிருக்க முடியும். எனினும் பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் பாராளுமன்ற ஜனநாயகத்தைப் பாதுகாத்து நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும். பாராளுமன்றத்தில் விரைவாகவே குழு முறைமை ஸ்தாபிக்கப்படும் என உறுதியளிக்கிறேன். விரைவாக அதனை செய்வதற்காக நிலையியற் கட்டளைகளில் மாற்றங்களை ஏற்படுத்தவும், சட்டங்களை இயற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். எரிபொருள்களுக்குப் பற்றாக்குறைக் காணப்படுகிறது. எமது நாடு எரிபொருளை உற்பத்தி செய்யும் நாடல்ல. மாறாக எரிபொருளை இறக்குமதி செய்யும் நாடேயாகும். நாட்டுக்குக் கிடைக்கும் அனைத்து டொலர்களையும் எரிபொருளுக்காக செலவிட வேண்டும். ஆனால் நாம் டொலர் நெருக்கடிக்கு முகங்கொடுப்பது அனைவரும் அறிந்ததே. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு உணவுகளை வழங்குவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க உள்ளதாகவும் கூறினார். அகிம்சை வழியிலான போராட்டங்களுக்கு செவிசாய்க்க அரசாங்கம் தயாராக இருக்கிறது. ஆனால் பயங்கரவாதச் செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது. அரசாங்கத்துடன் இணைந்து பொதுவான வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் பிரதமர் அழைப்பு விடுத்தார். தெளிவான வலுசக்தி கொள்கை ஒன்று நாட்டில் இல்லை. அவ்வாறிருந்திருந்தால் நாட்டின் வலுசக்தித் துறை இந்தளவு பாரதூரமான நிலைக்கு வந்திருக்காது எனவும் தெரிவித்தார்.

# 18 மாணவர்களுக்கு...

அதனை அடுத்து சட்ட நிறைவேற்று அதிகாரி, மாணவர் ஆலோசகர் மற்றும் மாணவர் ஒழுக்காற்று அதிகாரி உள்ளிட்ட குழுவினர் சம்பவ இடத்துக்கு நேரில் சென்று, புதுமுக மாணவர்களை சிரேஷ்ட மாணவர்களிடம் இருந்து மீட்டுள்ளனர்.

அதனை அடுத்து இந்தச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுக்க ஏதுவாக சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனும் சந்தேகத்தில் சிரேஷ்ட மாணவர்கள் 18 பேருக்கு தற்காலிக வகுப்பத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகம் தனது பூர்வாங்க விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. புதுமுக மாணவர்களின் வாக்குமூலங்களை பெறுவதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

பூர்வாங்க விசாரணைகளின் அடிப்படையில், குற்றவாளிகளாக காணப்படும் மாணவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும்.

அதன் அடிப்படையில் குற்றவாளிகளாக காணப்படும் மாணவர்களுக்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம், 2 வருட காலத்துக்கு குறையாத வகுப்பத்தடை விதிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

# மதுபானத்தின் தரத்தை அறிய செயலி

இலங்கைக்குள் வழங்கப்படும் எந்தவோர் இறக்குமதி செய்யப்பட்ட மதுபானத்தின் சட்டபூர்வமான தன்மையை கண்டறியும் விதமாக வகையில் முதலில் மொபைல் செயலியின் முன்னோடித் திட்டத்தை நடைமுறைப்படுத்த திணைக்களம் திட்டமிட்டுள்ளதாக திணைக்களம் தெரிவிக்கின்றது.

# இரு ராஜபக்ஷர்களின்...

அவற்றைத் தாக்கல் செய்த அதே மனுதாரர்களான இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் சந்திர ஜயரத்ன, பிரபல இலங்கை நீச்சல் வீரரும் பயிற்சியாளருமான ஜூலியன் பொலிங் மற்றும் ட்ரான்ஸ்பெரன்ஸி இன்டர்நஷனல் மற்றும் ஜெஹான் கனகரட்ன உட்பட மூன்று பல்கலைக்கழக கல்வியாளர்களால் நகர்த்தல் பத்திரமொன்று தாக்கல் செய்யப்பட்டது. முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவார்ட் கப்ரால், டபிள்யூ. அந்த. லக்ஷ்மன் மற்றும் முன்னாள் நிதியமைச்சின் செயலாளர் எஸ். ஆர்.ஆர்டிகல ஆகியோர் நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுக்கும் வகையில் இடைக்கால உத்தரவை பிறப்பிக்குமாறு கோரியமைக்கு அமைய நேற்று (27) வரை தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்து.

# கம்பஹா நீதிமன்ற...

வழக்கு விசாரணைக்காக ஆறு சந்தேக நபர்களை கம்பஹா நீதிமன்றத்துக்கு கொண்டு சென்ற போது, வாகனத்தில் வந்த இனந்தெரியாத ஒருவர் அல்லது குழுவினரால் குறித்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த நான்கு பேரும் கம்பஹா மாவட்ட வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்ப ட்டுஅனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சமன் பத்திரன தெரிவித்தார்.

மேலும், இவ்விடயம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்த பொலிஸார், துப்பாக்கிதாரிகளை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

# ஓகஸ்ட் 09ஆம் திகதி கொழும்புக்கு வாருங்கள்

ஊழல் அரசியல்வாதிகள், அரசியல் கலாசாரத்தில் இருந்து நாட்டை காப்பாற்றுங்கள் எனவும் போராட்ட இளைஞர்களிடம் பொன்சேகா கோரிக்கை விடுத்தார்.

மக்கள் வாழ்வதற்கு பொறுத்தமற்ற நாடாக இலங்கை மாறியுள்ளது. அரச நிறுவனங்கள், பாடசாலைகள் வாரத்தில் மூன்று நாட்களுக்கே இயங்குகின்றன. இவற்றுக்கு எதிராக மக்கள் வீதிக்கு இறங்கி போராடும்போது அவர்களை பயங்கரவாதிகள் எனக்கூறுவது சபையை தவறாக வழிநடத்துவதாகும் எனவும் தெரிவித்தார்.

பெற்றுக்கொள்ளும் கடன்களை எவ்வாறு மீள செலுத்துவது என்கிற திட்டம் அரசாங்கத்திடம் இல்லை. ராஜபக்ஷர்கள் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்ற முயல்கிறார்கள். இராணுவம், பொலிஸாரைப் பயன்படுத்தி மக்களை ஒடுக்கவே அரசாங்கம் நினைக்கின்றது. நாட்டு மக்கள் அனைவரும் இராணுவத்தில் உள்ள பலரும் போராட்டத்திலேயே இருக்கிறார்கள் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிந்துக்கொள்ள வேண்டும் என்றார்.

அனைத்து மக்களும் அடுத்த மாதம் 9ஆம் திகதி மீண்டும் கொழும்புக்கு வருகைத்தந்து போராட்டத்தின் இறுதி இலக்கை அடைந்துக்கொள்ள வேண்டும் எனவும், ஊழல் அரசியல்வாதிகள், ஊழல் கலாசாரத்திடமிருந்து நாட்டை காப்பாற்ற வேண்டும் எனவும் இதன்போது சரத் பொன்சேகா கோரிக்கை விடுத்தார்.

தற்போதைய பாராளுமன்றத்தில் ஊழல் அரசியல்வாதிகளே இருக்கிறார்கள். ஊழல் அரசியல் கலாசாரமே இருக்கிறது. எனவே ஒருவர், இருவரை விரட்டியடிப்பது மாத்திரம் போதாது என்பதை நாட்டில் உள்ள இளைஞர்கள் அறிந்துக்கொண்டுள்ளனர் என்றார். நாட்டை ஆதரிக்கக்கூடிய நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய பலர் இருக்கிறார்கள். இவர்கள் யாரென தெரிந்துக்கொண்டு அவர்களுடன் புதியக் கூட்டணி ஒன்றை அமைக்க வேண்டும். ஊழல் அரசாங்கத்தை தொடர்ந்து முன்கொண்டு செல்ல நிதி உதவிகளை சர்வதேசம் வழங்கக்கூடாது. இதனால் ஏற்படும் சிரமங்களை நாம் தாங்கிக்கொள்வோம் என்றார்.

# சீனாவிடம் 4 பில்லியன்...

மேலும், தற்போதைய பொருளாதார நெருக்கடியின் போது வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலாத்துறைக்கு உதவுமாறு இலங்கை சீனாவிடம் கோரிக்கை விடுத்துள்ளதுடன், பொருளாதார சரிவில் இருந்து மீள்வதற்கு உதவுவதற்காக அவசரகால நிதி உதவியாக 4 பில்லியன் அமெரிக்க டொலர் பெற்றுக்கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுவதாக சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் பாலித கொஹொன தெரிவித்தார்.

இதேவேளை, வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளில் தொடர்ச்சியான ஆதரவை வழங்குமாறும், அதேபோல் தேயிலை, உணவுப் பொருட்கள், ஆடைகள் மற்றும் ரத்தினங்கள் உள்ளிட்ட பொருட்களை வாங்க சீன நிறுவனங்களை ஊக்குவிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# போராட்டத்தில் “குடு" காரர்கள்

பாராளுமன்றத்தில் நேற்று (27) அவசரகால ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு கூறியுள்ளார்.

சில கட்சிகள் நாட்டின் பொருளாதாரத்தையும் எதிர்காலத்தையும் சீரழிக்கும் வகையிலேயே செயற்படுகின்றன. வாக்குகள் மூலம் நாட்டின் தலைமைத்துவத்தை கைப்பற்ற முடியாது என்று நினைப்பவர்கள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இப்போது போராட்டக்காரர்களின் செயற்பாடுகளை பார்த்து சுற்றுலாப் பயணிகள், முதலீட்டாளர்கள் வருவதற்கு அஞ்சும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்றார்.

போராட்டத்தின் மீது தாக்குதல் நடத்தியதால் வெளிநாட்டவர்கள் வருவதில்லை என்று சிலர் கூறுகின்றனர். ஆனால், போராட்டக்காரர்களின் செயற்பாடுகளே அந்த நிலைமைக்கு காரணமாக அமைந்துள்ளது. அவசரகாலச் சட்டத்தை கொண்டு வந்து நாட்டை பாதுகாக்க வேண்டியுள்ளது என்றார்.

இப்போது காலிமுகத்திடல் சென்றால் அங்கு போதைப்பொருள் காரர்களையே காணலாம். இந்த நாட்டில் உண்மையிலேயே அமைதியான போராட்டத்தை நடத்தியவர்கள் இந்த புதிய ஜனாதிபதி, பிரதமருக்கு பணிகளை முன்னெடுப்பதற்காக இடமளித்து அவர்கள் ஒதுங்கியுள்ளனர் என்றார்.

இதேவேளை, பொறுப்பற்ற வகையில் நடந்துகொண்ட நபர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். போராட்டக்காரர்கள் பற்றி பேசுவதற்கு சிலர் அஞ்சுகின்றனர். ஆனால் இவர்களை கட்டுப்படுத்தாவிட்டால் வாழும் உரிமைக்கூட இல்லாது போகும். இதனால் எப்படியாவது இதனை கட்டுப்படுத்த வேண்டும் என்றார்.

### அகிம்சை போராட்டத்தை அடக்க நினைத்தால்

# நாட்டில் இரத்த ஆறு ஓடும்



அகிம்சை வழியில் முன்னெடுக்கப்படும் போராட்டங்களை துப்பாக்கிகளைக் கொண்டு அடக்க நினைத்தால் நாட்டில் இரத்த ஆறு ஓடுமென சபையில் தெரிவித்த எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க, வடக்குக்கும், தெற்குக்கும் இந்த அனுபவம் நன்றாகவே இருக்கிறது என்றார்.

இலட்சக் கணக்கானோரை பலியாக்கி, ஆயிரக்கணக்கான இளைஞர்களை நாட்டை விட்டு வெளியேற்றி ஒட்டுமொத்த இளைஞர் பரம்பரையும் நாசமாக்கும் செயற்பாடுகளில் மீண்டும் இறங்க வேண்டாம். சர்வக்கட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும் என்றால் ஜனாதிபதி நேர்மையாக நடந்துக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அக்கிராசன உரையில் அவரது நேர்மையையும் நெருடிக்க நிலைமைகளுக்கான தீர்வையும் எதிர்பார்க்கிறோம். அவ்வாறு ரணில் செய்யவில்லை என்றால் ஜனாதிபதி பதவியிலிருந்து அவரை விரட்டுவதற்கான போராட்டங்கள் தொடரும் என்பதில் எந்தவிதமான சந்தேகங்களும் இல்லை என்றார்.

ஆர்ஜன்டினா, கிறிஸ் ஆகிய நாடுகள் 10 வருடங்களுக்கு மேலாக வங்குரோத்து நிலையில் இருக்கிறது. எனவே நாட்டின் தற்போதைய நிலையைக் கருத்திற்கொண்டு நாம் நேர்மையாகவும், ஒற்றுமையாகவும் செயற்படவில்லை என்றால் நாட்டில் நிச்சியமாக மீண்டும் இரத்த ஆறு ஓடும் எனவும், அவசரகால சட்டத்தை தான் எதிர்த்து வாக்களிப்பதாகவும் தெரிவித்தார்.





பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

அவசர காலச்சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணை மீதான விவாதம் நேற்று (27) நடைபெற்றது.

# ரணிலுக்கு அச்சம் உண்டு

தன்னையும் விரட்டியடிப்பார்கள் என்ற அச்சம் காரணமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவசரகாலச் சட்டத்தை கையில் எடுத்துள்ளார் என சபையில் தெரிவித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், இதனால் நாட்டில் இரத்த ஆறு ஓடும் நிலைமையை ஏற்படலாம் எனவும் எச்சரித்தார்.



அனைத்து அதிகாரங்களையும் கையில் வைத்துக்கொண்டு நாடெங்கிலும் வாழும் தமிழ் மக்களுக்கு எதிராக சித்திரவதைகள், பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள் நடந்தேறி 39 ஆண்டுகள் கடந்துள்ளன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மாமாவான ஜே.ஆர்.ஜயவர்தனவே அப்போது ஜனாதிபதியாக இருந்தார். ரணில் அப்போது கல்வி அமைச்சராக இருந்தார் எனவும் தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கு எதிரான 40 வருட அடக்குமுறைகளே நாட்டின் இந்நிலைமைக்கு காரணம். தமிழ் மக்களுக்கு எதிராக திருப்பப்பட்ட ஆயுதங்கள் சிங்கள மக்களை நோக்கியும் திரும்பும் என்று எங்களது தலைவர் கூறியிருந்தார். தற்போது அதுவே நடந்தேறி வருகிறது எனவும் தெரிவித்தார்.

தன்னை விரட்டியடிப்பார்கள் என்கிற அச்சம் காரணமாக ரணில் விக்கிரமசிங்க அவசரகாலச் சட்டத்தைக் கையில் எடுத்துள்ளார். இதனால் நாட்டில் இரத்த ஆறு ஓடும் நிலைமையை ஏற்படலாம். பாராளுமன்றம் கலைக்கப்பட்டு உடனடியாக தேர்தலுக்கு செல்ல வேண்டும் எனவும் தெரிவித்தார்.

கோட்டா என்பது ஒரு குறியீடு மாத்திரமே. எனவே அவரை வெளியேற வேண்டும் என மக்கள் கூறுகிறார்கள் என்றால் அதன் அர்த்தம் மக்கள் ஆணை வழங்கிய இந்த அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என்பதேயாகும். அதனை செய்யாது தொடர்ந்து ஆட்சியில் இருப்பீர்களாக இருந்தால் அதுவொரு பாசிச அரசாங்கமாகவே இருக்கும் எனவும் தெரிவித்தார்.

அரசாங்கம் மிருகத்தனமாக, கொடூரமாக நடந்துக்கொள்வோம் என்பதைக் காண்பிக்கவா விமான நிலையத்தில் வைத்து போராட்டக்காரர் ஒருவரை நாயைப் போல இழுத்து வந்தீர்கள்? என அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பியதோடு, எனது சகோதரர் கைது செய்யப்பட்டு தலைகீழாக தொங்கவிடப்பட்ட சித்திரவதை செய்யப்பட்டார். அதற்கு தற்போதைய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் தொடர்புள்ளது எனவும் தெரிவித்தார்.

### போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல்களால்

# ஐ.எம்.எப் உதவிகளை பெறுவதில் சிக்கல்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற 24 மணித்தியாலங்களுக்குள் காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் காரணமாக, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கவிருந்த உதவிகள் கிடைப்பதில் காலதாமதமாகியுள்ளதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

மத்திய வங்கியின் கொள்ளைக்காரர் என ரணிலை விமர்சித்துவிட்டு அவரிடமிருந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு வெட்கமில்லையா? எனவும் கேள்வி எழுப்பியதோடு, சர்வக்கட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான எந்தவிதமான அழைப்புக்களும் இதுவரையில் எதிர்க்கட்சி தலைவருக்குக கிடைக்கவில்லை என்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நாம் இணைந்து செயற்பட்ட காலங்களில் சர்வதேச சட்டங்களை மதித்துச் செயற்பட வேண்டுமென்றே அவர் எமக்கு கூறுவார். எனினும் ஜனாதிபதியாக பதவியேற்று 24 மணித்தியாலங்களுக்குள் நாட்டில் அவர் அவசரகாலச் சட்டத்தை அமல்படுத்தி போராட்டக்காரர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டிருப்பது எனக்கு ஆச்சரியமளிக்கிறது என்றார்.

இதற்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு, அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் கண்டனங்களை வெளியிட்டிருந்தன. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் வெளிநாட்டு இராஜதந்திரிகளை திட்டித்தீர்க்கிறார். 30 வருட யுத்தம் நாட்டில் இருந்தது. எனினும் இது தொடர்பில் எந்தவோர் இராஜதந்திரியும் அறிக்கைகளை விட்டதில்லை. எனவே இதுபோன்ற விடயங்களை தெரியாதவர்களே இராஜதந்திரிகளை திட்டித்தீர்க்கிறார்கள். இதனால் இலங்கைக்கும் சர்வதேச நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்தும் என்றார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஊழியர் மட்டத்த ஒப்பந்தத்தை செய்துக்கொள்வது இரண்டு மாதங்கள் பிற்போடப்பட்டுள்ளன. காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அரசாங்கத்தின் தாக்குதலே இதற்குக் காரணம். சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் கிடைக்கவில்லை என்றால் என்ன நடக்கும்? டிசெம்பர் மாதமளவில் கிடைக்கம் என மத்திய வங்கியின் ஆளுநர் கூறியிருக்கிறார். எனினும் அடுத்த வருடத்தின் பாதியிலேயே இதனைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார். மக்கள் ஆணையுடன் தெரிவு செய்யப்பட்ட புதிய அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றவே தாம் தயாரென சர்வதேசம் கூறுகிறது. ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை தப்பியோடிய பின்னர் இந்த அரசாங்கத்துக்கான மக்கள் ஆணை இல்லாதுபோனது என்றார்.

# ரணிலுடன் இணைந்து செயற்படமாட்டோம்

## சஜித் திட்டவட்டமாக அறிவிப்பு



காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதலை மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துடன் ஒன்றிணைந்து ஒருபோதும் ஐக்கிய மக்கள் சக்தி செயற்படாதென எதிர்க்கட்சி தலைவர் சஜித்பிரேமதாஸ சபையில் தெரிவித்தார்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற 24 மணித்தியாலங்களுக்குள் காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலை நடத்தக்கூறி ரணிலுக்கு ஆலோசனை வழங்கியவர் யார் என தெரியாது. ஆனால் இதுவொரு படுமோசமான தீர்மானம். எனவே இதுபோன்ற மக்களைக் காட்டிக்கொடுக்கும் மக்களுக்கு எதிரான தீர்மானங்களை எடுக்கும் அரசாங்கத்துடன் ஐக்கிய மக்கள் சக்தி இணைந்து செயற்படாது. அவ்வாறு செயற்படுதென்றால் நான் அரசியலில் இருந்து ஓய்வுபெறுவேன் எனவும் தெரிவித்தார்.

நாம் எமது கொள்கையில் உறுதியாக இருக்கிறோம். எனவே அரசாங்கத்துக்கு முட்டுக்கொடுக்கப்போவதில்லை. கோட்டா கோ கம மீது தாக்குதல் மேற்கொள்ளும்போது அங்கு கர்ப்பிணித் தாய்மார்கள், பிள்ளைகள், ஊடகவியலாளர்கள், பெண்கள் என பலர் இருந்தார்கள். அங்கிருந்து அடுத்த நாள் காலையில் செல்வதாக உறுதியளித்திருந்த நிலையில்

போராட்டக்காரர்கள் மீது மோசமானமுறையில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார். நாட்டுக்காக வரையரைற்ற உதவிகளை நாம் அரசாங்கத்துக்கு வழங்க தயார். ஆனால் ஒன்றாக அமர்ந்து பணியாற்றப்போவதில்லை என சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

### போராட்டக்காரர்களால்

# ஆட்சியை பிடிக்க முடியும்



ஜனாதிபதி, பிரதமரை ஆட்சியிலிருந்து போராட்டக்காரர்களால் விலக்க முடியுமாக இருந்தால் இந்த நாட்டின் ஆட்சி அதிகாரத்தையும் போராட்டக்காரர்களால் கைப்பற்ற முடியும் என சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார சபையில் தெரிவித்தார்.

ஒரு மாதத்தில் நான்கு அரசாங்கங்கள் மாறியுள்ளன. நாடு எந்தளவு ஸ்தீரமற்றுள்ளது எனபது இதனூடாக தெரிய வருகிறது. போராட்டக்கரர்களை ஒடுக்க முயன்றால் நாட்டில் சிவில் யுத்தம் வெடிக்குமென போராட்டக்காரர்கள் கூறுகிறார்கள். அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் என்னவென்பதை நான் கூற வேண்டியதில்லை. அது தொடர்பான அனுபவம் நாட்டுக்கு உள்ளது.

நாட்டில் சிவில் யுத்தமொன்று ஏற்பட்டால் வெளிநாட்டு இராணுவம் நாட்டுக்குள் வரும். போராட்டக்காரர்கள் அவர்களது கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். எனவே ஜனநாயக ரீதியாக சாதாரண முறையில் தேர்தலுக்கு செல்ல வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அடுத்த மார்ச் மாதமாகும்போது மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டிருக்க வேண்டும். அதனை செய்வதற்கான திட்டங்கள் இருக்கிறதா? இல்லை என்றால் மாகாணசபைத் தேர்தலை மீண்டும் காலந்தாழ்த்துவதா? இதுவா ஜனநாயகம் எனவும் வாசுதேவ நாணயக்கார கேள்வி எழுப்பினார்.



### சபை முதல்வராக சுசில்:

# பிரசன்ன முதற்கோலாசான்

பாராளுமன்றத்தின் புதிய சபை முதல்வராக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோன்று, பாராளுமன்ற ஆளும்கட்சியின் முதற்கோலாசானாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனங்களுக்கான நியமனக் கடிதங்கள் பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் பாராளுமன்றத்திலுள்ள பிரதமர் அலுவலகத்தில் வைத்து நேற்று (27) வழங்கப்பட்டன.



# வஜிர எம்.பியானார்



ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக வஜிர அபேவர்தன சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் நேற்று (27) சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட பின்னர் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக முன்னிலையில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான புத்தகத்திலும் அவர் கையொப்பமிட்டார்.

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் ஏற்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு வஜிர அபேவர்தன நியமிக்கப்பட்டுள்ளார். அவர் 1994ஆம் ஆண்டு தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி காலி மாவட்டத்தில் முதல் தடைவையாக பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டார்.

அத்துடன், அவர் பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சராகவும், பொது நிர்வாக, முகாமைத்துவ மற்றும் மறுசீரமைப்புத் திட்டங்கள் அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார். அத்துடன் அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகவும் தற்பொழுது செயற்பட்டு வருகிறார்.

உடனடிச் செய்திகளைத் தமிழ் மொழியில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணைந்திருங்கள்
தமிழ்Mirror பதிவு செய்வதற்கு
Dialog Type TM and send to 87798
Daily Rs.1/=+TAX
HUTCH Type TM and send to 2233
Monthly Rs.30/=+ TAX
SLTMOBITEL Type REG TM and send to 77012
Daily Rs.1/=+TAX



## பொதுச் சுகாதார பரிசோதகருக்கு கொவிட் தொற்று

■ எப்.முபாரக்



திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பொதுச் சுகாதார பரிசோதகர் ஒருவருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிண்ணியா சுகாதார வைத்திய பணிமனையில் கடமையாற்றி வரும் 51 வயதுடைய பொதுச் சுகாதார பரிசோதகரே கொவிட் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்.

கிண்ணியா தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்த போதே, தொற்று உறுதியாகியுள்ளது.

காய்ச்சல், அதிகளவிலான சளி காரணமாக அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக திருகோணமலை பொது வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

குறித்த பொதுச் சுகாதார பரிசோதகருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர் பரிசோதனையின் மூலமும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலையின் கடமை நேர வைத்திய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

தற்போது கொவிட் தொற்று மீண்டும் பரவிக் கொண்டு வருவதால், முகக் கவசங்களை அணியுமாறு பொதுமக்கள் வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், சமூக இடைவெளிகளை பேணி நடந்து கொள்ளுமாறும், கைகளை தொடர்ச்சியாக கழுவுமாறும் திருகோணமலை பிராந்திய சுகாதாரத் திணைக்களம், பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

### இலங்கைக்கு கடத்தவிருந்த

## 4,430 வலி நிவாரண மாத்திரைகள் பறிமுதல்

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்



தமிழ்நாடு, தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு படகில் கடத்திக் கொண்டு வர இருந்த 4,430 வலி நிவாரண மாத்திரைகளை இந்திய கியூ பிரிவு பொலிஸார், நேற்று முன்தினம் (26) மாலை கைப்பற்றியுள்ளனர்.

150 மில்லி கிராம் நிறையுடைய சுமார் 443 அட்டைகளில் இம் மாத்திரைகள் காணப்பட்டுள்ளன.

தூத்துக்குடி, திரேஸ்புரம் கடற்கரையில் இருந்து இலங்கைக்கு மாத்திரைகள் கடத்தல் நடக்க இருப்பதாக க்யூ பிரிவு பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில் இவற்றைக் கைப்பற்றியுள்ளனர்.

மாத்திரை கடத்தவிருத்த படகில் இருந்தவர்கள் தப்பி சென்றுள்ளதாகவும் படகு மற்றும் மாத்திரைகளை சுங்கத்துறை அதிகாரிகள் வசம் ஒப்படைத்துள்ளதாகவும் கியூ பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு கஞ்சா, புகையிலை, மஞ்சள், ஏலக்காய், கடலட்டை, களைக்கொல்லி மருந்து எனக் கடத்தி வந்த நிலையில், தற்போது மாத்திரை கடத்தலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### கதிர்காம ஆடிவேல் உற்சவம்:

# விசேட பஸ் சேவை ஆரம்பம்

■ எம்.எஸ்.எம்.ஹனீபா




கதிர்காம ஆடிவேல் விழா உற்சவத்தையொட்டி, இன்று வியாழக்கிழமை (28) முதல் தினமும் காலை 08 மணிக்கு கிரமமாக கல்முனையிலிருந்து கதிர்காமத்துக்கு இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக, கல்முனை சாலை முகாமையாளர் வி. ஜௌபர் தெரிவித்தார்.

கதிர்காமத்துக்குச் செல்லும் பயணிகள் முன்கூட்டியே ஆசன பதிவை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பஸ்ஸை முன் கூட்டியே குழுவாகப் பதிவு செய்தால் தனி பஸ்ஸை வழங்குவதற்கு ஏற்பாடு செய்வதாகவும் அவர் தெரிவித்தார்.

கதிர்காமத்திலிருந்து கல்முனைக்கு கிரமமான முறையில் மாலை 04 மணிவரை பஸ் சேவைகளை ஈடுபடுத்த உள்ளதாகவும் தெரிவித்தார்.

நாளுக்கு நாள் பயணிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து, பஸ் சேவைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுமெனவும் தீர்த்தத்தில் கலந்துகொள்ளும் அடியார்களை அழைத்து வர கூடுதலான பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுமெனவும் தெரிவித்தார்.

அத்துடன், உகந்தைக்கான பஸ் சேவை தினமும் காலை 07 மணி தொடக்கம் 10 மணி வரை 04 பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### பொருளாதார நெருக்கடி; மேலும் அறுவர்

# தமிழகத்துக்கு படையெடுப்பு

### இதுவரை 129 இலங்கையர்கள் சென்றுள்ளனர்

■ எம்.றொசாந்த், எஸ்.றொசேரியன் லெம்பேட், டி.சந்ரு



யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த மேலும் 06 பேர், கடல் வழியாக தமிழகத்துக்குச் சென்று, அகதி அந்தஸ்து கோரியுள்ளனர்.

கிளிநொச்சியில் வசித்து வந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 பேரும், யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒருவருமாக 06 பேர், தனுஷ்கோடிக்கு அருகில் உள்ள கம்பிப்பாடு எனும் இடத்தில் நேற்று (27) அதிகாலை இறக்கி விடப்பட்டுள்ளனர்.

அது தொடர்பில் தகவல் அறிந்த தமிழக கடலோர பாதுகாப்பு படை, அவர்களை மீட்டு, மண்டபம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விசாரணைகளின் போது, தாம் படகுக்கு ஒரு இலட்சத்து 50,000 ரூபாய் கொடுத்து வந்ததாக தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக அத்தியாவசிய பொருட்களான அரிசி, பருப்பு, கோதுமை மாவின் விலைகள் அதிகரித்துள்ளன. வைத்தியசாலைகளில் கூட மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மேலும், ஒரு மூடை சீமெந்து 3,500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதால் கட்டுமான தொழில் பாதிக்கப்பட்டு கூலி வேலைக்கு செல்ல முடியாததால் வாழ வழியின்றி வந்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடியை காரணம் காட்டி, கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி முதல் இன்று வரை இலங்கையில் இருந்து 129 பேர் அகதிகளாக தமிழகம் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## பாலின வன்முறைகளை ஒழிப்போம்

'பாலின சமத்துவம் மற்றும் போதைப்பொருள் பாவனையால் பாலினம் ரீதியாக மேற்கொள்ளப்படும் வன்முறைகளை ஒழிப்போம்' என்கிற தொனிபொருளில், ஹெல்த்தி லங்கா நிறுவனத்தால், திருகோணமலை – தம்பலகாமம், மூதூர், தோப்பூர் ஆகிய பிரதேச செயலகங்களில் செயலமர்வுகள் நடைபெற்றன.

### மோட்டார் சைக்கிள்

## விபத்தில் சகோதரர்கள் பலி; மட்டக்களப்பில் சோகம்

■ ஏ.எஸ். சதீஸ்

மட்டக்களப்பு, தன்னாமுனையில் நேற்று முன்தினம் (26) செவ்வாய்கிழமை பிற்பகல் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அண்ணன், தம்பி இருவரும் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளனர்.

மட்டக்களப்பு - திருகோணமலை நெருஞ்சாலையின் தன்னாமுனை பகுதியில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. பலியானவர்கள், சத்துருகொண்டான் கிராமத்தைச் சேர்ந்த இரு சகோதரர்கள் எனவும் டிப்பர் ரக வாகனம் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.







### வெலிக்கடை படுகொலை:

## மன்னாரில் அனுஷ்டிப்பு

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

வெலிக்கடை சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 39ஆவது ஆண்டு நினைவு தினமான 'தமிழ் தேசிய வீரர்கள் தினம்' மன்னார் மாவட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின் (டெலோ) அலுவலகத்தில் நேற்று (27) காலை 11 மணியளவில் நினைவு கூரப்பட்டது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் மாவட்ட அமைப்பாளர் லுஸ்ரின் மோகன் ராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில், வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்ட தலைவர் தங்கதுரை, தளபதி குட்டிமணி, முன்னணிப் போராளிகளான ஜெகன் மற்றும் தேவன் உட்பட 53 அரசியல் கைதிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

உருவப்படங்களுக்கு மாலை அணிவித்து, சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது கட்சியின் முக்கியஸ்தர், பாராளுமன்ற உறுப்பினருமான எஸ். வினோ நோகராதலிங்கம், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஈ.பி.ஆர்.கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ். ஆர்.குமரேஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டு, அஞ்சலி செலுத்தினர்.

### முல்லைத்தீவில் வாள்வெட்டு;

## குடும்பஸ்தர் உயிரிழப்பு

■ செ.கீதாஞ்சன்



முல்லைத்தீவு, முள்ளியவளை தெற்குப் பகுதியில் இளைஞர் குழுக்களுக்கிடையில் நேற்று முன்தினம் (26) இரவு இடம்பெற்ற வாய்த்தர்க்கம் வாள்வெட்டாக மாறியுள்ளது.

இதன்போது வாள்வெட்டுக்கு இலக்கான முள்ளியவளை தெற்கைச் சேர்ந்த குடும்பஸ்தரான 32 வயதுடைய பெருமாள் சதீஸ்வரன் படுகாயமடைந்த நிலையில், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற போதும் முள்ளியவளை பொலிஸ் நிலையத்துக்கு கிராமத்தவர்கள் தெரியப்படுத்தியும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகைதரவில்லை என மக்கள் குற்றம் சாட்டியுள்ளார்கள்.

குடும்பஸ்தரின் சடலம், மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

### உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ்

## மரக்கறி செடிகள் விநியோகம்

■ ஏ.எச்.ஏ. ஹூஸைன்

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள உணவுப் பற்றாக்குறையை நிவர்த்திக்கும் வகையில், உப உணவுப் பயிர் உற்பத்தியைப் பெருக்குவதற்காக கலைஞர்களுக்கு மரக்கறி செடிகள் விநியோகம் செய்யப்பட்டு வருவதாக ஏறாவூர் நகர விவசாய விரிவாக்கல் பிரிவின் போதனாசிரியை எம். எச். முர்ஷிதா ஷிரீன் தெரிவித்தார்.

ஏறாவூர் நகர பிரதேசத்திலுள்ள கலையாற்றல் மிக்க பல்துறைக் கலைஞர்களுக்கு கத்தரி, மிளகாய் கன்றுகளை வழங்கும் நிகழ்வு, ஏறாவூர் நகர பிரதேச செயலகத்தில் நேற்று (27) நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஏறாவூர் நகர உதவி பிரதேச செயலாளர், கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் கலந்துகொண்டனர்.



### காட்டுப் பாதையில்

## யானையின் உடலம் மீட்பு

■ சகா

கதிர்காம ஆடிவேல் விழாவுக்கான பாதயாத்திரை அடியார்கள் செல்லும் காட்டுப் பாதையில், யானை ஒன்றின் உடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆற்றுப் பாதையில் இருந்து வள்ளியம்மன் ஆற்றை நோக்கிச் செல்கின்ற பாதையில் இந்த யானை இறந்து கிடந்துள்ளது.

இது தொடர்பில் அடியார்கள் வழங்கிய தகவலுக்கமைய, மிருக வைத்தியர்கள் சம்பவ இடத்துக்கு வந்து, இறந்த யானையை உடற்கூறு பரிசோதனை செய்து, அடக்கம் செய்துள்ளனர்.



### தனுஷ்கோடியை அண்மித்து

## கடலில் மிதந்த கஞ்சா பொதிகள்

### விசாரணையில் இந்தியா

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

தமிழ்நாடு, இராமநாதபுரம் மாவட்டம், தனுஷ்கோடியை அடுத்த இரண்டாம் தீடை கடல் பகுதியில் நேற்று முன்தினம் (26) மாலை, இந்திய கடலோர காவல் படையின் ரோந்து கப்பலான 'ஹோவர் கிராப்ட்' கப்பல் ரோந்து பணியில் ஈடுபட்டு கொண்டிருந்த போது, அப்பகுதியில் சந்தேகத்துக்கிடமாக சாக்கு முடை கடலில் மிதந்து வந்துள்ளது.

இதையடுத்து கடலோர காவல் படையினர் மிதந்து வந்த சாக்கு மூட்டையை கைப்பற்றி பிரித்துப் பார்த்ததில் அதில் கஞ்சா பொதிகள் இருந்தமை தெரியவந்தது.

இதையடுத்து கைப்பற்றப்பட்ட கஞ்சா பொதிகள், சுமார் 50 கிலோ கிராம் என்றும் இது எப்படி கடலில் மிதந்து வந்தது, யாரேனும் கடத்தல்காரர்கள் ரோந்து கப்பலை கண்டதும் கடலில் போட்டுவிட்டு தப்பிச் சென்றார்களா என்ற கோணத்தில், இந்திய கடலோர காவல் படையினர் தீவிர விசாரணையை நடத்தி வருகின்றனர்.



## அம்பகமுவ பிரதேச செயலகத்தின்

# முன்மாதிரியை பின்பற்றின் பிரச்சினைகள் ஏற்படாது

இரா.யோகேசன்

எதற்கெடுத்தாலும் வரிசை முறையில் நிற்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையே நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. பல மணிநேரமாக, பல நாட்களாக வரிசையில் நின்றிருக்கும் மக்களுக்கு, உரிய முறையில் சேவைகள் வழங்கப்படுவதில்லை. அதனால், உயிர்பலிகள் கூட ஏற்பட்டுள்ளன.

ஆனாலும், சில நிறுவனங்களின் அதிகாரிகள் எவ்விதமான முன்னுரிமையும் வழங்காது, வரிசைகளில் நிற்பவர்களுக்கு சரியாக, கடமைகளைச் செய்துக்கொண்டுக்கின்றனர். அவ்வாறானதொரு சம்பவத்தை அம்பகமுவ பிரதேச செயலகத்தில் நேற்று (27) காணக்கூடியதாய் இருந்தது.

அந்த செயலக்தில், பிறப்பு, இறப்பு, திருமண தொடர்பான பதிவேடுகளை பெற்றுக்கொடுக்கும் பிரிவிலேயே நியாயமான முறையில் சேவைகள் வழக்கப்பட்டதை அவதானிக்கக்கூடியதாய் இருந்தது. அங்கு கடமையில் இருப்பவர்களின் முன்மாதிரியை, நாட்டின் ஏனைய பிரதேசங்களில் உள்ள நிறுவனங்களும், திணைக்களங்களும் பின்பற்றினால் ஏன்? எரிபொருள், எரிவாயு வரிசையில் காத்திருப்பவர்களுக்கும் நியாயமான சேவை கிடைக்குமாயின் பிரச்சினைகள் ஏற்படாது.

சில இடங்களில் பணியாற்றுவோர், வரிசைகளை கவனத்தில் எடுக்காது. தமக்குத் தெரிந்து உறவினர்கள், நண்பர்களுக்கு முன்னுரிமை கொடுத்து சேவைகளை செய்வதால், வரிசையில் கால்கடுக்க நின்றிருப்போர், முரண்பட்டுக்கொள்கின்றனர். வாக்குவாதங்களில் ஈடுபடுகின்றனர். இவையே குழப்பத்தை விழைவித்துவிடுகின்றது என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

எனவே, சேவை நிறுவனங்களில் பணியாற்றுவோர், முன்னுரிமையே ஓர் ஓரத்தில் தூக்கிவைத்துவிட்டு, நியாயமான முறையில் நடந்துக்கொள்வார்களாயின் வரிசைகளில் காத்திருப்போர் முரண்படமாட்டார்கள்.

சேவைகளை பெறுவதற்காக காத்திருப்போரும் இடையில் நுழைந்துவிடாது. இடைசெறுகளுக்கு இடமளித்துவிடாது காத்திருந்து சேவையை பெற்றுக்கொள்ள பழகிக்கொள்ளவேண்டும். இதனூடாக, குறுகிய காலத்துக்குள் தங்களுடைய வேலையை முடித்துக்கொண்டு வீடு திரும்பிவிடலாம் என்பதே மக்களின் கருத்தாகும்.





# எரிபொருள் மோசடி அம்பலம்

ரஞ்சித் ராஜபக்ஷ

கொட்டகலை எரிபொருள் கூட்டுத்தாபன களஞ்சியசாலையின் உயர் அதிகாரியொருவர், எரிபொருள் விநியோக வாகனத்தைப் பயன்படுத்தி எரிபொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளதாக எரிபொருள் பௌசர் சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

கொட்டகலை எரிபொருள் களஞ்சியசாலையிலிருந்து நுவரெலியா மாவட்டத்துக்கான சிபெட்கோ மற்றும் ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு எரிபொருளை ஏற்றிச் செல்லும் போது, குறித்த அதிகாரி பல வெற்றுக்கொள்கலன்களை அந்த வாகனத்தில் அனுப்புவதாகவும் சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

எரிபொருள் நிரப்பும் நிலையங்களிலுள்ள தாங்கிகள் நிரப்பப்பட்டதன் பின்னர், குறித்த வாகனங்களில் அனுப்பப்படும் வெற்று கொள்கலன்களுக்கு நிரப்பப்பட்டு சாரதிகளே அதனை கொட்டகலை நகரிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு கையளிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் குறித்த வர்த்தக நிலைய உரிமையாளரிடம் வினவியபோது, அந்த அதிகாரி தம்மிடம் ஒப்படைக்கும் கொள்கலன்களை அவரே மீட்டு செல்வதாகவும் தெரிவித்தார்.


## பூனாகலை மக்களை

# அச்சுறுத்தும் யானை

எம். குமார்

ஹல்துமுல்லை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பூனாகலை மூன்றாம் பிரிவு தோட்ட மக்கள் பல வருடங்களாக காட்டு யானை பிரச்சினைக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள். அத்தோட்டத்தில் சுமார் நானூறு குடும்பங்களைச் சேர்ந்த 2,500 பேர் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுள் பலர் தோட்டத் தொழிலில் ஈடுபடுவதுடன் பலர் விவசாயத்திலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அவ்வாறு விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் காட்டு யானை உள்ளிட்ட வன விலங்குகளுக்கு மத்தியில் விவசாயத்தில் ஈடுப்பட்டு வருவதாக தெரிவிக்கின்றார்கள்.



நாளாந்தம் இரவில் அப்பகுதிக்கு வரும் காட்டு யானைகள் அப்பகுதியில் உள்ள விவசாய நிலங்களை சேதப்படுத்துவதுடன் தென்னை, வாழை, பலாமரம் போன்ற பயன் தரும் மரங்களையும் சேதப்படுத்தி செல்வதாக மக்கள் தெரிவிக்கின்றார்கள். இது தொடர்பில், உரிய அதிகாரிகளுக்கு பல தடைவைகள் தெரிவித்த போதிலும், இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என தெரிவிக்கின்றனர்.



# தேயிலை உற்பத்தியில் வீழ்ச்சி

## பேராசிரியர் அருண குமார தெரிவித்தார்

எம்.பிரபா

இலங்கையின் தேயிலை உற்பத்தி 23 வருடங்களின் பின்னர் மிகக் குறைந்த பெறுமதியை இவ்வருடம் பதிவு செய்துள்ளது.

இதன்படி, நாட்டிற்கு அதிக அன்னியச் செலாவணியை ஈட்ட உதவி வரும் நாட்டின் தேயிலை தொழில் துறை கடும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதென ருஹுனு பல்கலைக்கழகத்தின் பயிர் விஞ்ஞான சிரேஷ்ட பேராசிரியர் அருண குமார தெரிவித்துள்ளார்

இலங்கையின் வருடாந்த தேயிலை உற்பத்தி சுமார் 330 மில்லியன் கிலோ கிராமாகும், இதில் சுமார் 323 மில்லியன் கிலோகிராம் உலகம் முழுவதும் பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

எவ்வாறாயினும், 23 வருடங்களின் பின்னர் மிகக் குறைந்த தேயிலை அறுவடை இந்த வருடம் ஜூன் மாதத்தில் பதிவாகியுள்ளதாகவும் இந்த வருடத்தின் முதல் 06 மாதங்களில் தேயிலை ஏற்றுமதி 08 சத வீதத்தால் குறைந்துள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரி முதல் ஜூன் வரை 130 மில்லியன் கிலோகிராம் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்ட நிலையில் இந்த ஆண்டு இதே காலகட்டத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு 125 மில்லியன் கிலோ கிராமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளர்.

இதனால் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 2.5 மில்லியன் தொழிலாளர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

நாட்டில் காணப்படும் உரம் இன்மை பிரச்சினை மற்றும் எரிப்பொருள் பிரச்சினையே இந்த நிலைக்கு மிக பெரிய தாக்கத்தை செலுத்தியுள்ளதாகவும் எனவே இவற்றை உடன் தேயிலை துறைக்கு பெற்றுக் கொடுத்து தேயிலை உற்பத்தியை உடன் மீள சரி செய்வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் வேண்டுக்கோள் விடுத்துள்ளார்.







# “வன்முறைத் தீவிரவாதம் வேண்டாம்”...

வன்முறைத் தீவிரவாதத்தை ஒழிப்பது தொடர்பாக பொதுமக்களை அறிவூட்டும் நிகழ்ச்சிகள் பலவற்றை கண்டி மாவட்ட சர்வமத அமைப்பு மேற்கொண்டு வரும் நிலையில், இதன் ஓர் அம்சமாக தேசிய சமாதான பேரவையின் அனுசரணையுடன் அக்குறணை நகரத்தில் நேற்று முன்தினம் (26) வீதி நாடகம் நடைபெற்றது. (மொஹொமட் ஆஸிக்)

## ரயிலன் தேயிலைத் தொழிற்சாலை

# தீயால் முற்றாக எரிந்து சாம்பலானது

எஸ்.கணேசன்

புஸ்ஸல்லாவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ரயிலன் தோட்டத்தில் அமைந்துள்ள தனியார் தேயிலை தொழிற்சாலையில் நேற்றுமுன்தினம் (26) இரவு 7.20 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக தொழிற்சாலை எரிந்து சேதமடைந்துள்ளது.

தீயை அணைக்க புஸ்ஸல்லாவை பொலிஸாரும், பொது மக்களும் முயற்சித்த போதும் தீயினால் தொழிற்சாலை முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

தீ வீபத்துக்கான காரணம் இதுவரை சரியாக



கண்டறியப்படவில்லை என்பதுடன், மின்னொழுக்கின் காரணமாக இந்த தீ விபத்து இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

எனினும், இந்த தீ விபத்து தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகவும், மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதாகவும் புஸ்ஸல்லாவை பொலிஸார் தெரிவித்தனர்.

# உதவும் கரங்கள் அமைப்பின் பணிகள் தொடர்கின்றன

ராமு தனராஜா



இரத்தினபுரியை தளமாக கொண்டு இயங்கும் உதவும் கரங்கள் அமைப்பின் தொடர் மக்கள் பணிகள், இப்பொருளாதார இடர்பாடான சூழலிலும் மிக சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் களுத்துறை மாவட்டம் கோவின்ன, கொபேவக்க பிரதேசத்தில் 9 மாத குழந்தைக்கு சத்திர சிகிச்சைக்காக மருத்துவ செலவுக்கான நிதியுதவியினையும் அதேபோன்று தீக்காயங்களுக்குள்ளாகி கொழும்பு றிஜ்வே சிறுவர் போதனா வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றுவரும் திருகோணமலையைச் சேர்ந்த 7 வயதான சிறுமிக்கு மருத்துவ செலவுக்கான நிதியுதவியும் உதவும் கரங்கள் அமைப்பு வழங்கி வைத்துள்ளது.

அத்தோடு இரத்தினபுரி- மாவலை பிரதேசத்தில் தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் வாழும் இரண்டு குழந்தைகளுக்கான நிதியுதவியையும் வழங்கியுள்ளது.



இந்த அமைப்பின் “கல்விக்கு கரங்கொடுப்போம்” செபற்திட்டத்திற்கு அமைய இரத்தினபுரி- ஹபுகஸ்தென்ன, கல்லேல்ல

இ/கலைமகள் தமிழ் தேசிய பாடசாலையில் அமைப்பின் நிதியொதுக்கீட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட

கொடி கம்பம், மேடை மாணவர்களின் பயன்பாட்டிற்கு கையளிக்கப்பட்டதுடன் ஹபுகஸ்தென்ன மூக்குவத்தை பிரதேசத்திலுள்ள விஷேட தேவையுடையோருக்கும் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்குமான உலர் உணவுப் பொருட்கள் என்பனவும் வழங்கிவைக்கப்பட்டன.



## கவரவில மக்களுக்கு

# விதைகள் விநியோகம்

செ.தி.பெருமாள்

சாமிமலை பிரதேசத்தில் உள்ள கவரவில தோட்டத்தில் விவசாயம் செய்ய ஆர்வுமுள்ள தொழிலாளர்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டன.

ஐ.எம்.எச்.ஓ. என்ற தொண்டு நிறுவன மூலம் பெருந்தொகையான விதைகள் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் (26) இடம்பெற்றது.

கவரவில தோட்டத்தில் உள்ள 395 குடும்பங்களுக்கு இவ்வாறு தங்களது வீட்டு தோட்டத்தில் பயிரிடப்படும் பல்வேறு விதமான விதைகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் தொண்டு நிறுவன இயக்குனர் மற்றும் கவரவில தோட்ட முகாமையாளர், உதவி முகாமையாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# விருந்தாளி திருடன் சிலிண்டருடன் சிக்கினார்

டி .சந்ரு

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டெஸ்போட் பகுதியில் வீடொன்றுக்குள் புகுந்து வெற்று சமையல் எரிவாயு சிலிண்டரை திருடிய நபரை தோட்ட மக்கள் மடக்கி பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பசுமலை பகுதியில் இருந்து டெஸ்போட் பகுதிக்கு விருந்தாளியாக வருகை தந்த நபர், நேற்று (27) காலை வீடு ஒன்றிலிருந்து வெற்று சிலிண்டர் ஒன்றைத் திருடி, கிரிமிட்டிய நகரில் விற்பனை செய்ய முற்பட்ட போது பிரதேச மக்களும் , இளைஞர்களும் அவரை மடக்கி பிடித்துள்ளார்கள்.

அத்துடன், மடக்கிப்பிடித்த சந்தேகநபரே பிரதேசவாசிகள் நானுஓயா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

# தேசிய அரசாங்கத்துக்கான வழியை துரிதமாகத் திறக்கவேண்டும்

நாட்டில், பொருளாதார, அரசியல் பிரச்சினைகளுக்கு இன்னுமே முறையாக தீர்வொன்று எட்டப்படவில்லை என்பது வெளிப்படையாகும். ஆனால், ‘தேசிய அரசாங்கம்’ என்ற குரல் இன்னுமே ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கின்றது என்பது மட்டுமே உண்மையாகும். அதற்கான அழைப்பு மணி, அரசாங்கத்திடம் இருந்தே ஒலிக்கவேண்டும்.

இடைக்கால அரசாங்கத்தின் அமைச்சரவையில், ஆளும் தரப்பினரைச் சேர்ந்தவர்கள் மட்டுமே உள்ளீர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். பாராளுமன்றத்தில் ஜூலை 20ஆம் திகதி நடத்தப்பட்ட ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பின்போது, ஆளும் கட்சியினர் மட்டுமன்றி, எதிர்த்தரப்பில் இருந்தும் பலரும் வாக்களித்தனர்.

சிலர் வெளிப்படையாகவே அறிவித்திருந்தனர். இரகசிய வாக்கெடுப்பு என்பதால், கட்சிகளின் ஏகோபித்த தீர்மானத்துக்கு அப்பாற் சென்று பலரும் வாக்களித்துள்ளனர் என்பது, அன்றைய பெறுபேறுகளை ஆராய்வதன் ஊடாக புலனாகின்றது. ஆக, விசுவாசத்தின் பிரகாரம் வாக்களித்துள்ளனர் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

எனினும், “எமது வேட்பாளர் தெரிவாகவில்லை” என, முன்னாள் ஜனாதிபதி ராஜபக்‌ஷ வெளிப்படையாகவே தெரிவித்திருந்தார். “தனது வெற்றி நிச்சயமற்றது” என தேசிய மக்கள் சக்தியின் எம்.பியான ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க முன்கூட்டியே அறிவித்துவிட்டார். கடும் நம்பிக்கையில் கூட்டணியாக களமிறக்கப்பட்ட டலஸ் அழகபெரும, இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

ஆனாலும், தேசிய அரசாங்கத்துக்கான யோசனைகளே இன்னும் முன்வைக்கப்படுகின்றன. அவ்வாறானதோர் அரசாங்கத்தின் தேவைப்பாட்டை மறுதலிக்க முடியாது. ஏனெனில், தற்போதைய அரசாங்கமே இரண்டொரு வருடங்களுக்கு நீடித்து இருக்குமாயின், அடுத்தடுத்த தேர்தல்களில் அவர்களின் கட்சிகளுக்கே பெரும் செல்வாக்குக் கிடைக்கும்.

அதுமட்டுமன்றி, பாராளுமன்றம் கூடுகின்ற போதெல்லாம். அரசாங்கத்தை வசைபாடுவதும் எதிரணியின் செயற்பாடுகளை குறை கூறுவதுமே இருபக்கங்களில் இருந்தும் கேட்கக்கூடியதாய் இருக்கும். எவ்விதமான முன்மாதிரியான யோசனைகளும் முன்வைக்கப்படமாட்டாது.

சர்வகட்சி பிரதிநிதிகள் அடங்கிய அமைச்சரவை நியமிக்கப்படுமாயின், வெற்றியோ தோல்வியோ, சகல கட்சிகளும் அடங்கிய அமைச்சரவைக்கே கூட்டுப்பொறுப்பு இருக்கும். அதிலிருந்து எவருமே தப்பித்துக்கொள்ள முடியாது. அதனூடாகவே மக்களின் தீர்மானங்கள் அடுத்தடுத்த தேர்தல்களில் இருக்கும்.

சர்வகட்சி அரசாங்கத்தை நிறுவுவதற்கு முறையான அழைப்பு, அரசாங்கத்தில் இருந்து விடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படுகின்றன. ஆகையால், புதிய அமைச்சரவையை நியமிப்பதற்கு முன்னர், சர்வகட்சி கூட்டமொன்றை நடத்தி, சர்வகட்சி அரசாங்கத்துக்கான அழைப்பை பொதுவெளியில் விடுவதன் ஊடாக, எவருமே தட்டிக்கழித்துவிட்டு தனிவழியில் செல்லமுடியாது. அவ்வாறான துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படுமாயின் அந்தக் கட்சிகளுக்கும் மக்கள் தகுந்த பாடத்தை புகட்டிவிடுவர்.

இது அதிகாரத்தை சுரண்டிப் பார்த்து, எதிர்கால அரசியல் இருப்பை தக்கவைத்துக்கொள்வதற்கான அத்திபாரம் இடும் நேரமல்ல. மக்களின் அன்றாட பிரச்சினைகளுக்கு உரியவகையில் தீர்வுகளை முன்வைத்து, மக்களின் வாழ்க்கையை கட்டியெழுப்ப வேண்டிய நேரமாகும் என்பதை கவனத்தில் கொண்டு, மிகச்சரியான தீர்மானங்களை எடுக்கவேண்டுமென நாமும் வலியுறுத்துகின்றோம்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

எந்தவொரு விடயத்திலும் பெருமைப்படவும் கூடாது. அதேவேளை எதற்கும் சிறுமைப்படவும் கூடாது.

தங்களுக்கு மட்டுமே எல்லாம் தெரியும் என சிலர் சொல்வதுண்டு. மேலும், பதவிநிலையில் சற்றுக் குறைந்தவர்களை, பலர் முன்னிலையில் சிறுமைப்படுத்துவார்கள். என்னுடைய வேலையை விட, உன்னுடைய வேலை பெரிதில்லை என நாகரிகமின்றிப் பேசுபவர்களை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

பெருமைப்படுவது மமதை. ஒருவர், தான் சிறுமைப்பட்டவர் என்று எண்ணிலாலே அது பலவீனம். மனிதன் வாழும்போது, சமநிலை எண்ணங்களுடன் கௌரவமாக, மனம் தளராது வாழவேண்டும்.

அகம்பாவம் பிடித்தவர்கள், தங்கள் குணத்தை மறைத்து, எளிமையான மனிதன் நான் என்று போலித்தனமாகச் சொல்வதுண்டு. ஆயினும் தக்க தருணங்களில், தன்னைவிடப் பெரியவர் எவரும் இல்லை எனச் சொல்லிவிடுவதுண்டு. வாழ்க்கையில் நடிக்க வேண்டிய அவசியம் இல்லை. எல்லோரும் ஒரே வர்க்கம்; நாங்கள் அனைவரும் மனிதர்கள்.

இன்று உலகம் போர் வலையில் சிக்குவதற்குக் காரணமே அகம்பாவம்தான். பெரும்பான்மையினம் என்றால், சிறுபான்மையினத்தை ஏளனத்துடன் பார்க்கலாமா? வர்க்க, இன பேதங்கள் எதுவுமே இல்லை. கர்வம் அழிவு.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### நற்பிட்டிமுனை பொதுச்சந்தையின் அவலம்



அம்பாறை மாவட்டம், கல்முனை மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட நற்பிட்டிமுனை பொதுச்சந்தையின் அவலம் குறித்து மாநகர சபையின் சொத்துக்குப் பொறுப்பான மாநகரத்தின் ஆணையாளர், இந்தப் பிரச்சினைக்கு தீர்வை வழங்க முன்வராமல் இருக்கிறார் என, நற்பிட்டிமுனை பொதுச் சந்தை வர்த்தகர்களும் ஊர் பொதுமக்களும் குற்றம் சுமத்துகின்றனர்.

நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு தமிழ், முஸ்லிம் மக்கள் பாவித்துவரும் சந்தையின் நீர் தாங்கி, பல மாத காலமாக உடைந்து, சேதமடைந்துள்ளது. இதனால் மீன்சந்தை, மலசலகூடம் என்பன கழுவிச் சுத்தம் செய்யப்படாமையால், துர்வாடை வீசுவதுடன் தொற்று நோய்கள் பரவும் ஆபத்தும் உள்ளது.

ஒரு மாதத்துக்கும் மேலாக, இங்குள்ள திண்மக்கழிவுகள் அகற்றப்படாமையால், இங்கு தேங்கியுள்ள கழிவுகளால் பாரிய சூழல் பாதிப்பும் ஏற்பட்டுள்ளது. மாநகர மேயர், ஆணையாளர் ஆகியோரும் நற்பிட்டிமுனை ஊரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாநகர சபை உறுப்பினர் சீ. எம். முபீத் ஆகியோரும் நற்பிட்டிமுனை மக்களின் பிரச்சினைக்கு உடனடித் தீர்வை பெற்றுத்தர முன்வரவேண்டும் என்று மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

–நூருல் ஹுதா உமர்

ஜனாதிபதி தேர்வில்

# தமிழ்த் தேசிய கட்சிகளின் வெளிப்பாடு



**புருஜோத்தமன் தங்கமயில்**

புதிய ஜனாதிபதியை தேர்தெடுப்பதற்கான பாராளுமன்ற வாக்கெடுப்பில், தமிழ்த் தேசிய கட்சிகள் மூன்றும், மூன்று விதமான தீர்மானங்களை எடுத்திருந்தன.

டளஸ் அழகப்பெரும - சஜித் பிரேமதாஸ அணியை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆதரித்திருந்தது. ரணில் விக்கிரமசிங்கவை, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஆதரித்திருந்தது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோ, பாராளுமன்ற வாக்கெடுப்பை புறக்கணித்திருந்தது.

தமிழ் மக்களைப் பொறுத்தளவில், ராஜபக்‌ஷர்களின் சுவடு இல்லாத ஆட்சிக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் பற்றி ஆராய்ந்து, புதிய ஜனாதிபதியை தேர்தெடுப்பதற்கான வாக்கெடுப்பில், தமிழ்த் தேசிய கட்சிகள் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் என்கிற விடயம், பேசு பொருளானது.

ஆனால், வழக்கம்போலவே தமிழ் மக்களின் முன்னால், பௌத்த - சிங்கள பேரினவாதிகளே வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டார்கள். அவர்களில், எது குறைவான தீயதோ, அதுதான் தமிழ் மக்களின் தெரிவாக இதுவரை காலமும் இருந்து வந்திருக்கின்றது. இந்த நோக்கத்தின் அடிப்படையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, டளஸ் - சஜித் அணியை ஆதரிக்க முடிவு செய்தது. விடுதலைப் புலிகள் ஆட்சி செலுத்திய காலங்களிலும் தமிழ் மக்கள், குறைந்த தீயதை ஆதரிக்கும் முடிவுகளுக்கே வந்திருக்கிறார்கள்.

ராஜபக்‌ஷர்களைக் காப்பாற்ற வந்த ஆபத்பாண்டவர் ரணில்; அவரை ஆதரிப்பது என்பது, ராஜபக்‌ஷர்களைக் காப்பாற்றுவதற்கு ஒப்பானது என்பது அடிப்படை வாதம்.

எனினும், அமெரிக்காவில் இருந்த டளஸை, அரசியலுக்கு மீண்டும் அழைத்து வந்தது ராஜபக்‌ஷர்கள். ராஜபக்‌ஷர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற தருணத்தில், தங்களுக்கு ஒத்துழைக்கக்கூடிய தரப்பினரை இணைக்கத் தொடங்கியிருந்தனர். அதன் ஒரு கூறாகவே, டளஸும் இலங்கை அரசியலுக்குள் மீண்டும் வந்தார்.

அவர், ராஜபக்‌ஷர்களுக்கு எதிரான மக்கள் போராட்டம் பெருமளவில் முன்னெடுக்கப்படும் தருணம் வரையில், ராஜபக்‌ஷர்களை ஆதரித்து, அவர்களை பூசிப்பதில் குறியாகவே இருந்தார். எனினும், ராஜபக்‌ஷர்களுக்கு எதிரான மக்களின் மனநிலை என்பது, பொதுஜன பெரமுனவில் உள்ள பலருக்கு, தங்களில் அரசியல் எதிர்காலம் குறித்த அச்சத்தை உண்டு பண்ணியது.

அதன்போக்கில், பெரமுனவில் இருந்து தனித்து இயங்குவதாக அறிவித்த குழுக்களில் டளஸின் அணியும் ஒன்று. அவர், குறைந்தது 40 பாராளுமன்ற உறுப்பினர்களை தன்னோடு வைத்திருக்கின்றார் என்ற விடயம்தான், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை, ஜனாதிபதி போட்டிக்கான வேட்பாளர் தேர்வில் இருந்து விலகிக் கொள்ள வைத்தது. டளஸ் ஜனாதிபதியானதும் சஜித் பிரதமராக நியமிக்கப்பட வேண்டும் என்கிற இணக்கப்பாடுதான், எதிர்க்கட்சிகளை டளஸின் பின்னால் செல்ல வைத்தது.

ரணில் எதிர் சஜித் என்கிற போட்டி ஏற்பட்டிருந்தால், சஜித்தை ஆதரிப்பது சார்ந்து கூட்டமைப்பில் உள்ளவர்களுக்கு பிரச்சினை ஏதும் இருந்திருக்காது. ஆனாலும், ரணிலை ஆதரிப்பது என்பது, டளஸை ஆதரிப்பதைவிட அதிகமான அளவில் ராஜபக்‌ஷர்களைப் பாதுகாக்கும் என்கிற விடயம் முன்நகர்த்தப்பட்டு, டளஸை ஆதரிக்கும் முடிவுக்கு கூட்டமைப்பு வந்தது.

அந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதும், டளஸ் - சஜித் அணியோடு புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் கூட்டமைப்பு கைச்சாத்திட்டது. ஆனால், கூட்டமைப்பின் அறிவிப்பு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட போதிலும், மொத்தமுள்ள 10 கூட்டமைப்பு எம்.பிக்களில் குறைந்தது நான்கு பேர் ரணிலை ஆதரித்து வாக்களித்து இருக்கிறார்கள் என்பது, கூட்டமைப்பு தலைமையின் எண்ணம். ரணில் அணியும், தங்களுக்கு ஐந்து கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்து இருக்கிறார்கள் என்ற விடயத்தை வெளிப்படுத்தினர்.

ஏனெனில், கூட்டமைப்பின் தீர்மானத்தை எடுக்கும் கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள், கூட்டம் நிறைவுபெற்ற சில நிமிடங்களில் ரணிலுக்கு, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களால் தெரிவிக்கப்பட்டுவிட்டது. அதுதான், டளஸை கூட்டமைப்பு ஆதரிக்க வேண்டும் என்கிற நிலைப்பாட்டை, இந்திய தூதரகம் எடுத்தமை தொடர்பிலான ராஜதந்திர நெருக்கடிக்கும் காரணமானது.

ரணில், இந்திய வெளிவிவகார அமைச்சரைத் தொடர்பு கொண்டு பேசுமளவுக்கு விடயம் சென்றிருக்கின்றது. எனினும், அவ்வாறான சம்பவங்கள் ஏதும் நடைபெறவில்லை என்று இந்திய தூதரகமும் கூட்டமைப்பின் தலைமைப்பீடமும் ஊடகங்களுக்கு அறிவித்திருக்கின்றன. ஆனால், அதன் உண்மைத்தன்மை எப்படிப்பட்டது என்பது, மக்களுக்கு விளங்கிக் கொள்ளக் கூடியதுதான்.

ஜனாதிபதியை தேர்வு செய்வதற்கான பாராளுமன்ற வாக்கெடுப்பு, இரகசியமான முறையில் இடம்பெறாது விட்டிருந்தால், ரணில் வெற்றிபெறுவதற்கான வாய்ப்புகள் இல்லை. இதுதான், மில்லியன் டொலர் பண பேரம் பேசப்பட்டு, வாக்குகள் விற்கப்படுவதற்கும் காரணமாகியது.

அத்தோடு, ஜனாதியாக ரணில் தேர்தெடுக்கப்பட்டால், தற்போதையை பாராளுமன்ற பதவிக்காலம் முழுமையாக முடிவடைந்த பின்னரே, தேர்தலொன்று குறித்து சிந்திக்கப்படும் என்கிற வாக்குறுதி, பொதுஜன பெரமுன தொடங்கி அனைத்துக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் ரணிலின் தரப்பால் வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கின்றது. அதனால், அவரை வெற்றிபெற வைக்கும் தேவை, கட்சி பேதங்கள் கடந்து பெரும்பான்மை எம்.பிக்களுக்கு ஏற்பட்டது. இதில், கூட்டமைப்பின் எம்.பிக்களுக்கோ, விக்னேஸ்வரனுக்கோ கூட, பெரும் உடன்பாடு இருக்கத்தான் செய்யும்.

ஏனெனில், டளஸ் - சஜித் கூட்டணி, தாங்கள் ஆட்சியமைத்தால், அடுத்த ஆறு மாதங்களுக்குள் பொதுத் தேர்தலொன்றுக்கு செல்வோம் என்று அறிவித்திருந்தது. அதுதான், அதிக பாராளுமன்ற உறுப்பினர்களை அச்சம் கொள்ள வைத்தது.

தற்போதையை பாராளுமன்றத்திலுள்ள அதிகமானவர்களுக்கு, மீண்டும் ஒரு தேர்தலை எதிர்கொள்வதற்கு பாரிய பயம். அதனால், பதவிக்காலத்தை முழுமையாக அனுபவித்துவிட்டு செல்லலாம் என்று நினைக்கிறார்கள். அத்தோடு, பெருமளவில் பேசப்பட்ட பண பேரம் என்பது, ஊழல்வாதிகளான பெரும்பாலான அரசியல்வாதிகளுக்கு உவப்பானதாக இருந்தது.

விக்னேஸ்வரன் ரணிலை ஆதரிக்க எடுத்த முடிவு என்பது, விசித்திரமான ஒன்று! ஏனெனில், ரணில்- மைத்திரி நல்லாட்சிக் காலத்தில் அவர், கூட்டமைப்பில் இருந்து விலகிச் செல்வதற்கு, “நல்லாட்சி ஆட்சியாளர்களை கூட்டமைப்பு பாதுகாக்கின்றது” என்று காரணம் கூறினார். அத்தோடு, ரணிலுக்கும் சம்பந்தனுக்கும் தனக்கும் இடையிலான சந்திப்பொன்றின் போது, வடக்கு - கிழக்கில் இருந்து இராணுவத்தை அகற்றுவதற்கு தன்னால் விடுக்கப்பட்ட கோரிக்கையை ரணில் புறந்தள்ளினார்; அப்போது அதைச் சம்பந்தன் கவனத்தில் கொள்ளாமல் இருந்தார் என்றெல்லாம் 2015 பொதுத் தேர்தல் காலத்தில் விக்னேஸ்வரன் வெளிப்படுத்தியிருந்தார்.

அத்தோடு, “புதிய அரசியலமைப்பு, தமிழ் மக்களின் சமஷ்டிக் கோரிக்கையை ஏற்கவில்லை. சம்பந்தனும் சுமந்திரனும் தமிழ் மக்களை, நல்லாட்சியை காப்பாற்றுவதற்காக ஏமாற்றுகிறார்கள்” என்றார்.

இவையெல்லாம் சேர்ந்துதான், அவரை தனி அரசியல் ஆளுமையாக முன்னிறுத்தும் வேலையை, தமிழ் மக்கள் பேரவையும் சில வைத்தியர்களும் கல்வியாளர்களும் ஒருசில அரசியல் ஆய்வாளர்களும் முன்னிறுத்தினார்கள். விக்னேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினராகியதும், இன்றைக்கு இந்தியாவின் புதுச்சேரி, கோவா ஒன்றியப் பிரதேசங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை ஒத்த அதிகாரங்கள், வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு வழங்குவதற்கு ரணில் வாக்குறுதி அளித்திருப்பதாக கூறினார். அதனால்தான், ரணிலை ஆதரிக்கும் முடிவுக்குத் தான் வந்ததாகவும் கூறுகிறார்.

இந்தியாவின் ஒன்றியப் பிரதேசங்களின் அதிகார வரம்பு என்பது, துணைநிலை ஆளுநரின் அதிகாரத்துக்கு முன்னால் ஒன்றுமே இல்லை. குறிப்பாக, புதுச்சேரியும் கோவாவும் மத்தியிலுள்ள ஆட்சிக்கு எதிரான நிலைப்பாடுள்ள கட்சியால் ஆளப்படுமானால், அங்கு எதுவுமே நடைபெறாது. அதற்கு துணைநிலை ஆளுநர் அனுமதி வழங்குவதில்லை.

புதுச்சேரியில், காங்கிரஸின் நாராயணசாரி ஆட்சியில் இருந்த போது, கிரன் பேடி துணைநிலை ஆளுநராக இருந்து கொடுத்த இடையூறுகள் வெளிப்படையானவை. கிட்டத்தட்ட இலங்கையின் மாகாண அலகுகள் தற்போது கொண்டிருக்கின்ற அதிகார வரப்பு எவ்வளவோ அது போன்றதொரு நிலையே, கோவா, புதுச்சேரி ஆகியவற்றுக்கும் உண்டு.

அப்படியான நிலையில், அவ்வாறான அதிகாரமொன்றை ரணில் வழங்கத் தயாராக இருக்கிறார்; அதனால் அவரை ஆதரிக்க விக்னேஸ்வரன் தீர்மானம் மேற்கொண்டார் என்பதெல்லாம், மக்களின் மண்டையில் மசாலா அரைக்கும் வேலையாகும்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பொறுத்தளவில், அவர்களின் ஜனாதிபதி தேர்தல் கால புறக்கணிப்பு நிலைப்பாட்டை, அதே கோரிக்கைகளுடன் இப்போதும் கடைப்பிடித்து இருக்கிறார்கள். அதில், ஆச்சரியப்பட ஒன்றுமேயில்லை.

ஜனாதிபதிக்கான பாராளுமன்ற வாக்கெடுப்பை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும் விக்னேஸ்வரனும் கையாண்ட விதம் தொடர்பில் மக்களுக்கு நிறையவே அறியக் கிடைத்திருக்கின்றது. அதாவது, உள்ளடி வேலைகளின் போக்கிலும், ஊழல்களுக்குத் துணைபோகும் நிலைப்பாட்டிலும் எம்.பிக்கள் செயற்பட்ட விதமும் வெளியாகி இருக்கின்றது. இந்த விடயங்கள், எதிர்கால தேர்தல் முடிவுகளின் போது, மக்களால் நினைவுகூரப்பட்டு, விலைபோகாத தலைவர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும்.










# ஊக்குவிப்பு...

அன்டலியாவிற்கான இலங்கையின் கௌரவத் தூதுவர் அலி கம்புரோக்லுவின் உதவியுடன் இலங்கை பட்டிக் ஊக்குவிப்பு நிகழ்வின் இரண்டாம் கட்டத்தை துருக்கியிலுள்ள இலங்கைத் தூதரகம் 2022 ஜூலை 20ஆந் திகதி ஏற்பாடு செய்தது.

துருக்கியின் சுற்றுலா மையமான அன்டலியா நகரில் உள்ள கொன்யால்டி கடற்கரையில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. பார்வை யாளர் இலங்கையின் பட்டிக் மற்றும் கைத்தறிப் புடவைகள், போர்வைகள், சால்வைகள் மற்றும் ஏனைய ஆடைகளின் கவர்ச்சியை பாராட்டியதுடன், இலங்கை விநியோகஸ்த்தர்களுடன் இணைந்து கொள்வதற்காக வர்த்தகத் தளங்களினூடாக தொடர்பு கொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டினர்.

நிகழ்வி ன் போது, இலங்கையின் பெஷன் துறை மற்றும் பட்டிக் மற்றும் கைத்தறியின் தனித்துவம் குறித்து தூதுவர் ரிஸ்வி ஹசன் அதிதிகளுக்கு விளக்கினார்.இலங்கையின் பட்டிக் மற்றும் கைத்தறித் தொழில்துறையை மட்டுமல்லாது குறும்படத் துறையையும் ஆராயுமாறு கௌரவத் தூதுவர் கம்புரோக்லு விருந்தினர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

இந்த நிகழ்வில் இலங்கையின் ஐந்து குறும்படங்கள் திரையிடப்பட்டதுடன், விருந்தினர்களுக்கு இலங்கையின் உணவு வகைகளும் வழங்கப்பட்டன.

# மனிதாபிமான செயற்பாடு





பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவளிப்பதற்கான மனிதாபிமான செயற்பாடு, மட்டக்களப்பு நகரில் நேற்று முன்தினம் (26) முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வபுஹாரி மொஹமட் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இந்த நிவாரணப் பணியின் போது, மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 250 பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

(படங்கள் – எம்.எஸ்.எம்.நூர்தீன்)


# கொரியாவின் நிதியுதவியில்






கொரிய அரசாங்கத்தின் நிதியுதவியில், கொய்கா திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட கிளிநொச்சி, முக்கொம்பன் மகா வித்தியாலயத்தின் இரண்டு மாடிக்கட்டடம் திறந்து வைக்கும் நிகழ்வு, பாடசாலையின் அதிபர் தலைமையில் ஜோய் பியசீலன் தலைமையில் நேற்று முன்தினம் (26) நடைபெற்றது.

(படங்கள் – மு.தமிழ்ச்செல்வன்)








# உதவிக்கரம்

தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட 300 குடும்பங்களுக்கு, பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில், பிரதேச செயலக மண்டபத்தில் வைத்து நேற்று (27) உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

(படங்கள் ஹஸ்பர்)







# உலர் உணவுப் பொருள்கள்



கந்தப்பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.டி.விக்கிரமசிங்க தலைமையில் கந்தப்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் வறுமை நிலையிலுள்ள குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் கையளிக்கும் நிகழ்வு நேற்று (27) காலை கந்தப்பளையில் நடைபெற்றது. ஆ.ரமேஸ்





# முன்மாதிரியான பொலிஸார்

மூதூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சோமநுவரவின் ஏற்பாட்டில், மூதூர் ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளை பெறுவதற்காக காத்திருக்கும் பொதுமக்களுக்கு, நேற்று முன்தினம் (26) இரவு தேனீர் மற்றும் பிஸ்கட் உள்ளிட்ட சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன .

(படங்கள் – தீஷான் அஹமட்)







சென்னை

மாணவிகளுக்கு இழிசெயல் நடந்தால்

# அரசு வேடிக்கை பார்க்காது

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

தமிழகத்தில் மாணவிகளுக்கு மனம் மற்றும் உடல் ரீதியாக இழிசெயல் நடந்தால் அதை அரசு வேடிக்கை பார்க்காது என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை வேளச்சேரியில் உள்ள குருநானக் கலைக் கல்லூரியின் பொன்விழா நிகழ்ச்சி பங்கேற்று உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். கொரோனா தொற்றால் என் தொண்டை பாதிக்கப்பட்டுள்ளது. தொண்டை பாதிக்கப்பட்டாலும் தொண்டு பாதிக்கப்பட கூடாது என்பதால், என் பணிகளை தொடர்ந்து செய்து வருகிறேன் என்றார்.



அண்மை காலமாக நடந்த சில நிகழ்வுகள் தனக்கு மன வேதனையை தந்ததாகவும், கல்வி நிறுவனங்களை நடத்துவோர் அதை வர்த்தகமாக இல்லாமல் தொண்டாக நினைக்க வேண்டும் என்றும் கூறினார். மாணவர்களுக்கு பட்டம் மட்டும் போதாது எனவும், தன்னம்பிக்கையும் மன உறுதியும் வேண்டும் எனவும் முதலமைச்சர் தெரிவித்தார்.மாணவிகளுக்கு மன, உடல் ரீதியாக இழி செயல் நடந்தால் தமிழக அரசு வேடிக்கை பார்க்காது. குற்றவாளிகளுக்கு நிச்சயம் தண்டனை பெற்று தரும் எனவும் அவர் உறுதிபட தெரிவித்தார்.

தொல்லைகளையும், அவமானத்தையும் மாணவர்கள் தைரியமாக எதிர்கொள்ள வேண்டும் என்று கூறிய அவர், சோதனைகளை வெல்லும் ஆற்றல் பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். மாணவர்களுக்கு தற்கொலை எண்ணம் கூடவே கூடாது, தலை நிமிரும் எண்ணம் மட்டுமே இருக்க வேண்டும் என்றார்.

சென்னை

ராஜீவ் கொலை வழக்கு:

# முருகன் மீதான வழக்கை விசாரித்து முடிக்க உத்தரவு



சிறை அறையில் சோதனை நடத்த எதிர்ப்பு தெரிவித்ததாக ராஜீவ் கொலை வழக்கு ஆயுள் கைதி முருகன் மீதான வழக்கை விரைவாக விசாரித்து முடிக்க வேலூர் நீதிமன்றத்துக்கு, சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் கைதியாக வேலூர் சிறையில் உள்ள முருகனின் அறையில், கடந்த 2020ம் ஆண்டு சிறை அதிகாரி உள்ளிட்டோர் சோதனை நடத்தினர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த முருகன், சிறை அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகக் கூறி, அரசு அதிகாரிகளை பணி செய்ய விடாமல் தடுத்தல் உள்ளிட்ட ஐந்து பிரிவுகளின் கீழ் முருகனுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கை ரத்து செய்யக்கோரி முருகன் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு நீதிபதி சதீஷ்குமார் முன் விசாரணைக்கு வந்த போது, இந்த வழக்கில் இன்னும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை என முருகன் தரப்பு வழக்கறிஞர் தெரிவித்தார். அதனையடுத்தே மேற்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# 4,430 வலி நிவாரண மாத்திரைகள் பறிமுதல்

தூத்துக்குடி மாவட்டம் திரேஸ்புரம் கடற்கரையில் இருந்து இலங்கைக்கு கடத்தவிருந்த வலி நிவாரண மாத்திரைகள் சுமார் 4,430 க்யூ பிரிவு பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.



கேரளா

# அமர்வதை தடுத்தால் மடியில் அமர்வோம்



அருகே அமர்வதை தடுத்தால் மடியில் அமர்வோம் என மாணவ மாணவியர் தங்கள் நூதன எதிர்ப்பை தெரிவித்து எடுத்துக்கொண்ட புகைப்படம் இணையத்தில் வைரலாகி வருகிறது.

கேரளா மாநிலம் திருவனந்தபுரத்தில் உள்ளது திருவனந்தபுரம் பொறியியல் கல்லூரி. இந்த கல்லூரிக்கு அருகேயுள்ள பேருந்து நிறுத்தத்தில் பொதுமக்கள் வசதிக்காக இருக்கைகளுடன் கூடிய நிழற்குடை அமைக்கப்பட்டுள்ளது. இங்கு வழக்கமாக கல்லூரி மாணவ மாணவியர்கள் அமர்ந்து பேசி செல்லும் வழக்கம் உள்ளது.

இந்த பேருந்து நிழற்குடை இருக்கைகளில் மாணவ மாணவியர்கள் அருகருகே அமர்ந்து பேசுவது சிலருக்கு பிடிக்கவில்லை. இதை தடுப்பதற்கு அந்த மர்ம நபர்கள், நிழற்குடையின் இருக்கைகளை சேதப்படுத்தி, இருக்கை நடுவே இடைவெளி விட்டு இன்னொரு இருக்கை இருக்குமாறு நிழற்குடையை மாற்றி அமைத்துள்ளனர். இதனால் அதிர்ச்சியடைந்த கல்லூரி மாணவ மாணவியர்கள் இது குறித்து முறைப்பாடு செய்துள்ளனர்.

தொடர்ந்து இந்த சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாகவும், நூதன நடவடிக்கையில் ஈடுபட்டனர். அந்த நிழற்குடை இருக்கையில் மாணவர்கள் அமர்ந்திருக்கும் நிலையில், அவர்கள் மடியில் மாணவிகள் அமர்ந்துகொண்டு அதை புகைப்படம் எடுத்துள்ளனர். நாங்கள் நண்பர்கள். எங்கள் நட்புக்கு பாலின வேறுபாடு இல்லை எனக் கூறி பதிவிட்டுள்ளனர். இந்த புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

சென்னை

அ.தி.மு.க. விவகாரம்:

# ஓ.பி.எஸ் இன் மேன்முறையீடு மீது இன்று விசாரணை

அண்ணா திராவிட கழகம் (அ.தி.மு.க.) பொதுக்குழுவை எதிர்த்து ஓ.பன்னீர் செல்வம் (ஓ.பி.எஸ்) தாக்கல் செய்திருந்த மேன்முறையீட்டு வழக்கு உச்ச நீதிமன்றத்தில் இன்று (29) விசாரணைக்கு வருகிறது.

சென்னை வானகரத்தில் அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டம் கடந்த 11-ந் திகதிநடைபெற்றது. இந்த பொதுக்குழு கூட்டத்தில் ஒற்றை தலைமை தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அ.தி.மு.க.வின் இடைக்கால பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி (இ.பி.எஸ்) தெரிவு செய்யப்பட்டார். முன்னதாக இந்த பொது குழுவுக்கு தடை விதிக்க கோரி ஓ.பன்னீர்செல்வம் மற்றும் பொதுக்குழு உறுப்பினர் சண்முகம் ஆகியோர் சென்னை உநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கு தனி நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி தலைமையில் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி, 'உள்கட்சி விவகாரத்தில் தலையிட முடியாது' என்று கூறி வழக்கை தள்ளுபடி செய்தார். இதை எதிர்த்து ஓ.பன்னீர் செல்வம் உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார்.

மேன்முறையீட்டு மனுவில், அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தை கூட்ட வேண்டுமாயின் 15 நாட்களுக்கு முன்பு அழைப்பு அனுப்ப வேண்டும். ஆனால், 2 நாட்களுக்கு முன்புதான் அழைப்பு அனுப்பப்பட்டது. மேலும் பொதுக்குழு கூட்டம் 11ஆம் திகதி காலை 9.15 மணிக்கு தொடங்கியது. ஆனால் இதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பை சென்னை உயர்நீதிமன்ற தனி நீதிபதி காலை 9 மணிக்குத்தான் வழங்கினார். எனவே தனி நீதிபதியின் தீர்ப்பை ரத்து செய்ய வேண்டும். கடந்த 11 ஆம் திகதி நடைபெற்ற பொதுக்குழு கூட்டம் சட்ட விரோதமானது என அறிவிக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.



புதுடெல்லி

500 ஆணுறைகள், 400 மதுபான போத்தல்கள் பறிமுதல்

# 23 பெண்களுடன் பாலியல் தொழில்



புதுடெல்லி மேகாலயா பாரதிய ஜனதா துணைத் தலைவர் பெர்னார்ட் என். மரக் கேரா ஹில்ஸ் பகுதியின் சுயாதீன மாவட்ட கவுன்சிலின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஆவார்.

இவருக்கு பண்ணை வீடொன்று உள்ளது. அங்கு விபசார விடுதி நடத்தப்படுவதாக வந்த இரகசிய தகவலின் பேரில் அவ்வீட்டில் பொலிஸார் சோதனை நடத்தினர்.

அப்போது அங்கிருந்து 23 பெண்கள், 73 இளைஞர்களை பொலிஸார் கைது செய்தனர். மேலும், அங்கிருந்து ஐந்து சிறுமிகளையும் பொலிஸார் மீட்டனர். மரக் தலைமறைவாகி விட்டார்.

அந்த பண்ணை வீட்டிலிருந்து 400 மதுபான போத்தல்கள், 500 ஆணுறைகள் அடங்கிய பெட்டிகளை பொலிஸார் பறிமுதல் செய்தனர் டசன் கணக்கில் கார்கள் இருந்தன.

ஆப்கானிஸ்தான்

# இந்து, சீக்கியர்களுக்கு தலிபான்கள் அழைப்பு

நாட்டை விட்டு வெளியேறிய இந்துக்கள் மற்றும் சீக்கியர்கள் ஆப்கானிஸ்தானுக்குத் திரும்ப வேண்டும் என்று தலிபான்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இது குறித்து இந்து மற்றும் சீக்கியத் தலைவர்களை ஆப்கானிஸ்தான் அமைச்சர் முல்லா அப்துல் வாசி சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் போது " பாதுகாப்புப் பிரச்சினைச் சரிசெய்யப்பட்டுள்ளதால் நாட்டை விட்டு வெளியேறிய அனைத்து இந்து மற்றும் சீக்கியர்கள் மீண்டும் ஆப்கானிஸ்தானுக்கு திரும்பலாம்" எனத் தெரிவித்தார்.

இதற்கிடையே பயங்கரவாத தாக்குதலால் சேதமடைந்த காபூலில் உள்ள குருத்வாராவை



புதுப்பிக்க ஆப்கானிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஜேர்மனி

## CHEWING GUM தால் கோடீஸ்வரியான யுவதி

ஜேர்மனியை சேர்ந்தவர் ஜூலியா ஃபோராட். 30 வயதான இவர் ஒரே நேரத்தில் 30 சூயிங் கம்களை வாயில் போட்டு மென்று பபுள் விடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார்.

இதற்காக ஒரு மாதத்திற்கு தோராயமாக 5 யூரோக்களை அவர் செலவிடுவதாக் கூறப்படுகின்றது.

எனினும் இதன்மூலம் அவருக்கு ஒரு மாதத்திற்கு 700 யூரோக்கள் (இலங்கை மதிப்பில் 2,98,026.ரூபாய்) கிடைப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் விளையாட்டாக இதனை ஆரம்பித்ததாகவும் தற்போது சிறந்த பகுதி நேர வேலையாக இது இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் பேசுகையில்,"உங்கள் சூயிங்கம் கிளிப்களை விற்கலாம் என்று என் நண்பர் ஒரு நாள் நகைச்சுவையாக என்னிடம் கூறினார். இது கொஞ்சம் வேடிக்கையாகத் தோன்றியது. ஆனால் நான் சில தேடல்களை மேற்கொண்டேன். அதற்காகவே இயங்கிவரும் ஆன்லைன் குழுக்களை கண்டறிந்த பிறகு அது உண்மையானது என்பதை உணர்ந்தேன்" என்றார்.

விளம்பரப் பிரிவில் பணிபுரிந்துவரும்அவர் மிகக் குறுகிய நாட்களிளேயே இந்த சூயிங்கம் தொழிலை பகுதிநேர வேலையாக செய்ய ஆரம்பித்துள்ளார்.

இந்நிலையில் விரைவிலேயே ஜூலியாவுக்கு ஏகப்பட்ட ரசிகர்கள் குவிய ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




ஜேர்மனி

## 'லுப்தான்சா' அதிரடி அறிவிப்பு

ஜேர்மனியில் 20,000 பணியாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதால், ஃபிராங்ஃபர்ட் மற்றும் முனிச்சிலிருந்து 1,000 விமானங்களை நேற்றைய தினம் (27) லுஃப்தான்சா (Lufthansa)நிறுவனம் இரத்து செய்துள்ளது.

இந்நிலையில் விமானங்கள் இரத்து செய்யப்பட்டதால் சுமார் 1, 34,000 பயணிகள் பாதிப்படைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவமானது அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்கா

## இப்படியும் ஒரு வீதியா?

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் சாலை ஒன்றில் வளைந்து நெளிந்து வரையப்பட்ட கோடுகளால் வாகன சாரதிகள் குழப்பம் அடைந்துள்ளனர்.

ஒப்பந்தக்காரரிடம் சாலை வளைவை சரியாக செய்யுங்கள் என்று கூறியதைத் தவறாகப் புரிந்து கொண்டு ஜிக் ஜாக் வடிவில் கோடு வரைந்திருப்பதாக Hollister மேயர் தெரிவித்தார்.

இந்நிலையில் அந்த நெளிவு சுளிவான வளைவுக் கோடுகள்



விரைவில் சரி செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

வாகன சாரதி ஒருவர் இந்த ஜிக்-ஜாக் கோடுகளை வீடியோ எடுத்து இணையத்தில் வெளியிட அது தற்போது வேகமாகப் பகிரப்பட்டு வருகிறது.

பிரித்தானியா

## இணையத்தை கலக்கும் குட்டி ஐன்ஸ்டீன்

ஐன்ஸ்டீன் கண்டுபிடிப்புகள் எந்த அளவிற்கு உலக அளவில் பிரபலமோ அவருடைய தலைமுடியும் அதே அளவிற்கு பிரபலமானது எனக் கூறலாம்.



இந்நிலையில் ஐன்ஸ்டீனை போலவே தலைமுடியைக் கொண்டுள்ள குட்டி குழந்தை ஒன்று இணையத்தில் பிரபலமடைந்து வருகின்றது.

பிரித்தானியாவில் கிரேட் பிரேக்கிங் ஹாமில் வசித்து வரும் லைலோ டேவிஸ் ' என்ற 18 மாத குழந்தையொன்றே இவ்வாறு இணையத்தில் வைரலாகி வருகின்றது.

இக் குழந்தையானது "uncombable hair syndrome" எனப்படும் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும்,இந்த பாதிப்பு உள்ளவர்களுக்கு தலைமுடியானது வறண்டு குச்சி போல நீண்டிருக்கும் எனவும் எனவும் கூறப்படுகின்றது.

உலகில் நூறில் ஒருவருக்கு இந்த சிண்ட்ரோமால் பாதிக்கப்படுபவர்கள் என நிபுணர்கள் கூறியுள்ளனர்.

வெள்ளி பொன்னிறம் அல்லது வைக்கோல் நிறத்தில் தலைமுடி நீண்டு கொண்டிருக்கும் முதன்முதலாக 1973 ஆம் வருடம் கண்டுபிடிக்கப்பட்ட இந்த சிண்ட்ரோம் மரபணுவில் ஏற்படும் ஜீன் மாறுதலால் உருவாகின்றது.இதனை குணப்படுத்துவதற்கு சிகிச்சைகள் எதுவும் இல்லை என்றாலும் பிள்ளைகள் வளர்ந்து பருவமடையும் போது ஓரளவுக்கு மாறலாம் அல்லது முழுமையாக சரியாகலாம் என அமெரிக்கா அரசின் மரபணு மற்றும் அரிய நோய்கள் தகவல் மையம் கூறியுள்ளது.

ரஷ்யா

## ரஷ்யாவால் உலகமே அதிர்ச்சி

அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், கனடா, ஐரோப்பிய நாடுகள் தற்போது சர்வதேச விண்வெளி நிலையத்தில் பங்களிப்பை வழங்கி வருகின்றன.

இந்நிலையில் வரும் 2024ஆம் ஆண்டிற்குப் பின்னர் சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து ரஷ்யா விலக முடிவெடுத்துள்ளதாக அந்நாட்டு விண்வெளி ஆய்வு மையமான ரோஸ்கோஸ்மோஸ் அறிவித்துள்ளது.

உக்ரேனுடனான போர் காரணமாக ரஷ்யா மீது மேற்கு நாடுகள் பொருளாதாரத் தடைகள் விதித்து வரும் நிலையில், அந்நாடு இம்முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


ரஷ்யா

## அடிக்குமேல் அடி வாங்கும் ரஷ்யா

உலக நாடுகளின் எதிர்ப்புக்களையும் மீறி உக்ரேனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே 150 நாட்களுக்கும் மேலாக தீவிரமாகப் போர் இடம்பெற்று வருகின்றது.

இதன் காரணமாக ரஷ்யா மீது அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், கனடா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட பல நாடுகளும் பொருளாதாரத் தடைகளை விதிப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில்,



ஐரோப்பிய ஒன்றியமானது ரஷ்ய நாட்டிற்கு விதித்த பொருளாதாரத் தடைகளை மேலும் ஆறு மாதங்கள் நீட்டிக்க தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# போராடும் பாகிஸ்தான்

பாகிஸ்தான், இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் போராடி வருகிறது. இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், காலியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான இப்போட்டியில் 508 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடும் பாகிஸ்தான், நேற்றைய நான்காம் நாள் ஆட்டமானது போதிய வெளிச்சமின்மை காரணமாக முடிவுக்கு வரும்போது ஒரு விக்கெட்டை இழந்து 89 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

தற்போது களத்தில், இமாம்-உல்-ஹக் 46 ஓட்டங்களுடனும், அணித்தலைவர் பாபர் அஸாம் 26 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதுள்ளனர். வீழ்த்தப்பட்ட விக்கெட்டை பிரபாத் ஜெயசூரிய வீழ்த்தியிருந்தார்.

முன்னதாக தனஞ்சய டி சில்வானின் 109, அணித்தலைவர் திமுத் கருணாரத்னவின் 61, ரமேஷ் மென்டிஸின் ஆட்டமிழக்காத 45, அஞ்சலோ மத்தியூஸின் 35 ஓட்டங்களோடு தமது இரண்டாவது இனிங்ஸில் 8 விக்கெட்டுகளை இழந்து 360 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தமது இனிங்ஸை இலங்கை இடைநிறுத்தியிருந்தது. பந்துவீச்சில், நசீம் ஷா, மொஹமட் நவாஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், யசீர் ஷா, நௌமன் அலி, அக்ஹா சல்மான் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்திருந்தனர்.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

இலங்கை: 378/10 (துடுப்பாட்டம்: தினேஷ் சந்திமால் 80, நிரோஷன் டிக்வெல்ல 51, ஒஷாட



பெர்ணாண்டோ 50, அஞ்சலோ மத்தியூஸ் 42, திமுத் கருணாரத்ன 40, ரமேஷ் மென்டிஸ் 35, தனஞ்சய டி சில்வா 33 ஓட்டங்கள். பந்துவீச்சு: நசீம் ஷா 3/58, யசீர் ஷா 3/83, மொஹமட் நவாஸ் 2/80, நௌமன் அலி 1/64)

பாகிஸ்தான்: 231/10 (துடுப்பாட்டம்: அக்ஹா சல்மான் 62, இமாம்-உல்-ஹக் 32, யசீர் ஷா 26, ஹஸன் அலி 21 ஓட்டங்கள். பந்துவீச்சு: ரமேஷ் மென்டிஸ் 5/47, பிரபாத் ஜெயசூரிய 3/80 தனஞ்சய டி சில்வா 1/15, அசித பெர்ணாண்டோ 1/62)

இலங்கை: 360/8 (துடுப்பாட்டம்: தனஞ்சய டி சில்வா 109, திமுத் கருணாரத்ன 61, ரமேஷ் மென்டிஸ் ஆ.இ 45, அஞ்சலோ மத்தியூஸ் 35 ஓட்டங்கள். பந்துவீச்சு: நசீம் ஷா 2/44, மொஹமட் நவாஸ் 2/75, அக்ஹா சல்மான் 1/41, நௌமன் அலி 1/54, யசீர் ஷா 1/80)

பாகிஸ்தான்: 89/1 (துடுப்பாட்டம்: இமாம்-உல்-ஹக் ஆ.இ 46, பாபர் அஸாம் ஆ.இ 26 ஓட்டங்கள். பந்துவீச்சு: பிரபாத் ஜெயசூரிய 1/46)

## சமநிலையில் பார்சிலோனா ஜுவென்டஸ் போட்டி

ஐக்கிய அமெரிக்காவில் இலங்கை நேரப்படி நேற்றுக் காலை நடைபெற்ற ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனா, இத்தாலிய சீரி ஏ கழகமான ஜுவென்டஸுக்கிடையிலான சிநேகபூர்வப் போட்டியானது 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

பார்சிலோனா சார்பாகப் பெறப்பட்ட கோல்களை உஸ்மான் டெம்பிலி பெற்றதோடு, ஜுவென்டஸ் சார்பாகப் பெறப்பட்ட கோல்களை மொய்ஸே கீன் பெற்றிருந்தார்.

இதேவேளை, ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்றிட், மெக்ஸிக்கோ கழகமான அமெரிக்கா ஆகியவற்றுக்கிடையிலான போட்டியும் 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.



## 'மெஸ்ஸியின் பார்சிலோனா மீள்வருகை சாத்தியமில்லை'



ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவுக்கு அவ்வணியின் முன்னாள் அணித்தலைவர் லியனல் மெஸ்ஸி திரும்புவது தற்போது சாத்தியமற்றது என அவ்வணியின் முகாமையாளர் ஸ்கெவி தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், எதிர்காலத்தில் 35 வயதான மெஸ்ஸியை மீளக் கொண்டு வருவதற்கான கதவை உறுதியாக ஸ்கெவி சாத்திரிருக்கவில்லை.

பார்சிலோனாவில் மகிழ்ச்சியான முடிவை மெஸ்ஸி கொண்டிருப்பதை உறுதிப்படுத்துவது தனது பொறுப்பு என தான் கருத்திற் கொள்வதாக பார்சிலோனா தலைவர் ஜோன் லபோர்ட்டா கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

## யுனைட்டெட்டுக்குச் செல்லும் நெய்மர்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முன்களவீரரான கிறிஸ்டியானோ றொனால்டோவுக்கான பிரதியீட்டுப் பட்டியலில் பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் முன்களவீரரான நெய்மரும் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

யுனைட்டெட்டை விட்டு வெளியேறுவதில் 37 வயதான றொனால்டோ உறுதியாயுள்ள நிலையிலேயே மேற்படி தகவல் வெளியாகியுள்ளது.

30 வயதான நெய்மர் தவிர, இன்னொரு பிரெஞ்சு லீக் 1 கழகமான மொனாக்கோவின் முன்களவீரரான விஸாம் பென் யெடரும் இப்பட்டியலில் காணப்படுகின்றார்.



இலங்கை கால்பந்தாட்ட சம்மேளன தலைவர் தங்க கிண்ணத் தொடர்:

# சம்பியனானது அக்கரைப்பற்று ஹிஜ்றா

எம்.எல்.எஸ். டீன்

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத் தலைவர் தங்கக் கிண்ணத் தொடரில் ஹிஜ்றா விளையாட்டு கழகம் சம்பியனானது.

அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் சுப்பர் சொனிக் விளையாட்டுக் கழகத்தை 2-0 என்ற கோல் கணக்கில் வென்றே ஹிஜ்றா சம்பியனானது.

தகுதிகாண் அடிப்படையில் இடம் பெற்ற போட்டிகளில் வெள்ளிக் கிண்ணத் தொடரில் சூ சிட்டி விளையாட்டு கழகம் சம்பியனானதுடன், இரண்டாமிடத்தை இறக்காமம் ஐ.ஆர்.எப்.சி அணி பெற்றுக் கொண்டது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 28 ஜூலை 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.